
20 காசு

# காஞ்சி

22-6-69 நிறுவனர்: அண்ணாதுரை

24.6.69



செ. ந. கிருட்டிணன்,

செங்கற்பட்டு நகரமன்றத் தலைவர்.

## கேட்டீரா/ சேதி!

காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு அடிக்கடி தலைவலியைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நாளிதழான நவசக்திக்கு உலகம் எங்கே எப்படி இயங்குகிறது என்பதே புரிவதில்லை, இந்த அலுவலகம் சாக்கடை ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டிப்பதனுலோ என்னவோ, எந்தச் செய்தியைப் படித்தாலும் அதிலே சாக்கடை நாற்றத்தைதான் காண முடிகிறது. செய்திகளை சுவைசொட்டத் தருவது என்பது ஒரு முறை. சோகம் கொட்டத் தருவது என்பதும் ஒரு முறைதான் ஆனுல், மல நாற்றமடிக்கும்படியாகத் தருவது என்ருல் அது நவசக்தி ஒன்றினுல்தான் முடியும். மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் இப்போதைய முறை பழைய காங்கிரசுக் கட்சி மேற்கொண்டிருந்தமுறைதான் என்பதை ஏனே அவ்விதழ் அடிக்கடி மறந்துவிடுகிறது. பரத்தையொருத்தி, அடுத்தவீட்டு அருந்ததியைக்கூட பரத்தையென்றே மதிப்பாளாம். இயல்பைப் பொறுத்த விஷயம் இது. தன் கடந்தகால அனுபவங்களை நிகழ்காலத்தோடு பொருத்திப்பார்ப்பது விரும்பத்தக்க முறைதான். இந்த முறையையொட்டி சோரம்போன தன் நினைவலைகளை, இப்போதைய மருத்துவக் கல்லூரி தேர்வு முறைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து ஒப்பாரிவைப்பது எதற்கு என்றுதான் புரியவில்லை. ஒருவேளை ஏமாற்றிப் பிடைக்கும் வாய்ப்பு தனக்கு இல்லையே என்பதால் இருக்குமோ என்னவோ!

• • •

தெலுங்கானு மாநிலப் பிரிவினையை கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒரு பிரிவு மறைமுகமாக ஆதரித்துக் கொண்டிருக்கிறது. இன்னெரு பிரிவு ஆந்திர அரசைக் கலைத்துவிட வேண்டும் என்று கேட்டு ஊர்வலமும் நடத்தி, தடையுத்தரவை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டுமிருக்கிறது. இந்த நிலையில் கல்கத்தாவிலிருந்து வலது கம்யூனிஸ்டு கட்சியின் மேலிடம் அறிவித்திருக்கிற கருத்து வியப்புக்குரியதாயிருக்கிறது. தெலுங்கானு பிரிவினையை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கவில்லையென்றும், கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் எனவும், போராடுவோரை பாரபட்சமின்றி தண்டிக்க வேண்டும் எனவும் அறிவித்திருக்கிறது. ஆடு குட்டியைக் கண்டிக்கிறதா, குட்டி ஆட்டைக் கண்டிக்கிறதா என்பது போகப் போகத் தானே தெரியும்!

• • •

"1970-ம் ஆண்டிலிருந்து நாம் வெளிநாட்டு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவேண்டி இருக்காது" என்று அண்மையில் மத்திய உணவமைச்சர் ஜெகஜீவன் ராம் சிம்லாவிலிருந்து பேசி இருக்கிருர். காங்கிரஸ் துரைத்தனம் 1951ல் முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் கடையை விரித்த இரண்டாவது ஆண்டிலேயே இனிமேல் வெளிநாட்டு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யமாட்டோம் — உணவில் தன்னிறைவு பெறுவோம்! என்றே கூறியது. அடுத்து இரண்டாம், மூன்ரும் திட்டங்களின் மையப்போதுகளில் எல்லாம் தன்னிறைவு பற்றி எடுத்துக் காட்டப்பட்டு வந்திருக்கிறது. காங்கிரசுக்கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தநாள் முதல் விடாது எடுத்துரைக்கப்படும் தன்னிறைவு நிலை எப்போது வாய்க்குமோ தெரியவில்லை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 20 கோடி நிதி உதவி தந்தால் ஒரே ஆண்டில் தன்னிறைவு நிலையை எய்த முடியும் என்று கடந்த ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணு அவர்கள் தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிருர்கள். தன்னிறைவாளர்கள் அப்போது இது பற்றி அக்கறை காட்டவில்லை. காலங் கடந்தும் வாய்ப்பந்தல் போடுவதும், நாப்பறை கொட்டுவதும் நிற்கவில்லை. தன்னிறைவு விஷயத்தில் பேச்சைக் குறைத்து செயலில் இறங்கினுல்தான் முடியும். செயல் எனும்போது சுடிவாளம் மாட்டிக்கொண்டால் முடியுமா?

• • •

இந்தியா, குடியரசுத் தலைவரைத் தெரிந்தெடுக்கப்படும்பாடு, மிகமிகப் பரிதாபகரமாக இருக்கிறது. இதுவரையில் துணைக் குடியரசுத் தலைவரே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறபோது, இப்போது மட்டும் அந்த மரபை மாற்றிக்கொள்ள நினைப்பது, இப்போதைய துணைக்குடியசுத் தலைவரும், தற்காலிகக் குடியரசுத் தலைவருமான திரு. வி. வி. கிரியின்மேல் நம்பிக்கையில்லை என்பதனைக்காட்டுவதாக இருக்கிறது. 1972க்குப் பின்பு. காங்கிரசுக்கட்சியினைக் காப்பாற்றித்தரக்கூடிய ஒருவரைத் தேடுவதாகத் தெரிகிறது. இரங்கத்தக்க நிலைமைதான்! இந்த முயற்சிகளேகூட 1972ல் காங்கிரசை இன்னமும் பலவீனப்படுத்தி விடக்கூடும். குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுபவர், கட்சி நலன்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டவராக இருக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் எடுத்துக் காட்டி இருக்கிருர். இதனையே இரு கிழமைகளுக்கு முன்பு எச். வி. ஆர். ஐயங்காரும் விளக்கி இருக்கிருர். கட்சி உறவுகாரணமாக நேருவும், ராஜன் பாபுவும் எலியும் பூனையுமாக விருந்த நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிருர். மத்திய அரசுக்கு உரைக்குமோ என்னமோ!

• • •

தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டம், இப்போது புதிய பொலிவுடன் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஒரு முதல் பரிசும், 5 இரண்டாவது பரிசும், ஐம்பது மூன்ரும் பரிசும் கொடுக்கப்பட்டு வந்தது. அடுத்த மாத குலுக்கல் முதல் பத்தாயிரம் ரூபாய் பரிசுகள் பத்துப் பேருக்கும் ஆயிரம் ரூபாய் பரிசுகள் நூறு பேருக்கும் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கத்தக்க இந்த மாற்றத்தின் மூலம் இன்னும் பரிசுச் சீட்டு விற்பனை விரிவடையும் என்று நம்பப்படுகிறது. அதோடு, பரிசுச் சீட்டுகளை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அனுப்பும்போது ஒரே வகை எண்கள் தொடர்ந்து ஒரே மாவட்டத்துக்குக் கிடைக்கின்ருற் போலவே இதுவரை அனுப்பப்பட்டு வந்திருக்கிறது. எத்தனை சீரிஸ்கள் வந்தாலும் அவற்றின் தொடக்க எண்கள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. இதை மாற்றி பலதரப்பட்ட எண்களும் எல்லா மாவட்டங்களுக்கும் கலந்து கிடைக்கும்படியான ஏற்பாடுகளைத்தொடர்பான அதிகாரிகள் செய்துகொண்டால் பலனும் கலந்து கிடைக்கும். பயனும் விரிந்த அளவுக்கு உண்டு.

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 22—6—69 | இதழ் 49

# ஆசிரியர்களின் அழுகுரல்!

சென்ற கிழமை, சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் ஆசிரிய சமுதாயத்துக்கு ஒரு பேரிடியைப் போட்டுவிட்டிருக்கிறார். ஆனால் அதேவேலையில் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு முத்துசாமி அவர்கள்பேரிடியின் கடுமையைக் கொஞ்சம் தணித்து விட்டிருக்கிறார்.

அதாவது மாநகராட்சிப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டு வரும் சுமார் 1500 ஆசிரியர்களுக்கு வேலை நீக்க உத்திரவு பிறப்பித்திருக்கிறார் ஆணையாளர். ஆணையாளரது உத்திரவை நிறுத்தி வைத்து வேலை செய்யும்படியான நிலையை, உண்டாக்கி வைத்திருக்கிறார் அமைச்சர்.

1500 ஆசிரியர்களது குடும்பத்தை நடுத்தெருவில் விடுவதென்பது அத்துணைச் சாமான்யமான விஷயமல்ல. "தற்காலிக வேலை" என்ற அடைமொழியை ஒட்டி வேலை கொடுத்துவிட்டு, பின்னர் திடுதிப்பென்று வேலை நீக்கம் செய்வது என்பது மனிதாபிமானத்துக்குட்பட்ட செயலென்று யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் 1500 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்வதன் மூலம், இவர்கள் அத்துணைப் பேருக்கும் பதிலாக புதியவர்கள் யாரையும் நியமிக்காமலிருப்பார்கள் என்றும் நம்பமுடியாது. மாற்று ஏற்பாடாக நியமனம் நடைபெற்றே தீரும்.

அவ்வாறு நியமிக்கப்படுவோரும் "தற்காலிகம்" என்ற அடைமொழியுடனேதான் இருக்கமுடியும். இப்படி ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்குப்பின் இதுபோன்ற வேலை நீக்கப் பணியிலே அக்கறை கொள்வதென்பது அறிவுத்துறைக்குப் பொருந்தாததுமட்டுமல்ல—புத்திபூர்வமான ஒருசெயலாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பொதுவாக நாட்டில் ஒருவன் தன் வயிற்றைக் கழுவிக்கொள்ளப்படும் பாடு, தறியும் படாது தாளமும் படாது. இவற்றைப்பட்டு ஒருவன் வேலை தேடிக்கொள்ளும்நிலை பகீரதன் கங்கையைக்கொண்டுவந்த கதைக்கு ஒப்பானதேயாகும்.

இவ்வளவு அரும்பாடுபட்டு, பொருள் செலவு செய்து ஒருவேலையைத் தேடிக்கொண்ட பின்னர், திடீரென ஒருநாள் வீட்டுக்கனுப்பிவிடும் நடவடிக்கையை மேற்கொள்ளும்போது, பாதிக்கப்பட்டோர் வடிக்கின்ற கண்ணீர் கூரியவாளாகிப்போகும். அதுவே பெரும் படையை உடைக்கின்ற கூர்வேலாக மாறும்.

மேற்குறிப்பிட்ட நகராட்சி ஆசிரியர்கள் விஷயமாக, தொடர்ந்து பணியாற்ற உள்ளாட்சித்துறை அமைச்சர் உத்திரவிட்டிருந்தாலும், இதுதொடர்பாக மறுபரிசீலனை செய்யப்படுவதாகவும் அறிவித்திருக்கிறார்.

செய்யப்படுகிற மறுபரிசீலனை, ஆசிரிய சமுதாயத்துக்கு அநீதி இழைப்பதாக இருக்கக்கூடாது.

நிருவாக சௌகரியம் என்ற பெயரிலே கல்வித் துறையிலே இழைக்கப்படுகிற அநீதிகளுக்கு வரைமுறை இட்டாகவேண்டும்.

தேவைப்படும் காலி ஸ்தானத்துக்குத்தான் ஆட்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்களே தவிர, தேவைப்படாத நிலையில் யாருக்கும் எந்த வேலையும் தரப்படுவதில்லை என்பதையும் அரசாங்கம் நன்கு உணரவேண்டும்.

எம். இ. ஆர். என்று அழைக்கப்படும் கல்விச் சட்டம், இன்னமும் ஆங்கிலேய அரசு வகுத்து வைத்துச் சென்ற நிலையிலேயே இருக்கிறது. ஆங்கிலேய அரசின் நிருவாகத்துக்கு இச்சட்டம் துணைபுரிந்திருக்கக்கூடும். ஆனால் காங்கிரஸ் ஆட்சிக்கு எப்படித் துணைபுரிந்தது என்பதனை நம்மால் உணர முடியவில்லை.

இந்தக் காரணத்தால் கடந்த காலத்தில் ஆசிரிய சமுதாயம் பலதரப்பட்ட தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளாகி வந்திருக்கிறது. அதே தொல்லைகளும் துயரங்களும் இனியும் கழக ஆட்சியில் நீடிக்கவிடுவது நல்லதல்ல—விரும்பத்தக்கதுமல்ல.

கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் நல்லதோர் வழக்கறிஞரும்கூட. உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு முத்துசாமி அவர்கள் இனிய ஆசிரியராக வாழ்ந்தவர்.

நல்லகாலமாக கல்வி தொடர்பான துறைகள் இந்த இருபாலாரிடமும் இருக்கின்றன. கிடைத்திருக்கின்ற இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தமிழக ஆசிரியப் பெருமக்களின் நல்வாழ்வை மனதிற்கொண்டு புதிய கல்விச் சட்டம்காண முயலவேண்டும்.

வேலைக்குப் பாதுகாப்பற்ற தன்மை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும், வேலையிலிருந்து நீக்கிவிட்டு, புதியவர்களைப் போடுவதன் மூலம், தொடர்புடையவர்களின் சேவைக்காலம் எப்படியெல்லாம் பாழாகிறது என்பதை அரசும் நிர்வாகமும் உணர்ந்துகொண்டால் நல்லது. இதன் மூலம் மிச்சப்படுத்த நினைக்கும் பணம் சில லட்சங்களைக்கூட தாண்டாது என்பது உணரப்பட்டால், குறை களையவேண்டிய அவசியமும் உணரப்படும்.

கல்வி போதனையிலும், கல்விக் கொள்கையிலும் மட்டுமே அக்கறை காட்டிக்கொண்டு வருவது விரும்பிய பலனைத் தந்துவிடாது, போதிக்க வருவோரது நலன்பேணத்தக்க சட்ட நடைமுறைகள்பற்றியும் அரசு அக்கறை காட்டவேண்டும்.

ஒவ்வொரு துறையிலும் வேலைப் பாதுகாப்பும், சட்டப் பாதுகாப்பும் வேண்டப்படுகிறபோது ஆசிரிய சமூகத்துக்கு மட்டும் அது வழங்கப்படாமல் மறுக்கப்படுவது, அதுவும் சட்ட விதிகளைக் காரணம் காட்டி மறுப்பது மக்களாட்சிக் கோட்பாடாகத் தோன்றவில்லை.

மாநகராட்சி ஆணையரது உத்திரவை நிறுத்தி வைத்திருப்பது மட்டுமே போதிய பாதுகாப்பாகி விடாது என்பதை உணர்ந்து, தேவைப்படும் மாறுதல்களை நிரந்தரமாகச் செய்து வேலைப் பாதுகாப்புத் தர வேண்டும்.

மாநகராட்சி ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல—நாடெங்கும் அறிவுப் பணியில் ஈடுபட்டுள்ள அத்துணைப் பள்ளி ஆசிரியர்களுக்கும்தான்.

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள், இதனை முன்னின்று முடிக்க முனைந்தால்தான் ஆசிரியர்களது அழுகுரல் ஓயும்—எடுங்கும்.

★

தம்பி

# வீரத் தியாகி

நடுநிசி! தூக்கம் வரவில்லை; துக்கம் துளைக்கிறது; வெட்கமும் வேலாகக் குத்துகிறது; கொழுந்துவிட்டெரியும் பெருநெருப்பும், அதிலே கிடத்தப்பட்டுள்ள தியாகத் திருமேனியும், தெரிகிறது; தீ என்னைத் தீண்டாது, தீயோரின் பிடியிலிருந்து நான் விடுதலை பெற்றுவிட்டேன், தீரமற்றோரே! தெளிவற்றோரே! இனி தீ உங்களைத்தான் தாக்கும்! வெந்து வேதனைப் படுங்கள்! உணர்ச்சியற்ற உருவாரங்களே! உண்ண, உடுக்க, இருக்க, வழி கிடைத்தால் போதும் என்று எண்ணி, அவைதமைப் பெற 'எடுபிடி'யாகவும், இழி நிலையைச் சகித்துக்கொள்ளவும் சம்மதித்துக் கிடக்கும் சத்தற்ற ஜென்மங்களாகிவிட்டீர், சடங்களே! கருகிப் பொடியாகட்டும், எனக்கென்ன! இதோ நான் கண் மூடிவிட்டேன்! இனி உங்களைத் திரும்பிப் பாரேன்! செல்கிறேன், சிந்திக்கவும் செயலாற்றவும் திறனற்றுப்போன உம்மைக் காணக் கூசினேன், இந்த நிலை பெற்றீரே என்றெண்ணிக் குமுறினேன், இனி இவர் தம்கூட்டுறவு வேண்டாம் என்றுதுணிந்தேன், சாவை வரவேற்றேன் நான் மறைகிறேன். நீங்கள் உலாவுங்கள்!! நான் இறந்துபடுகிறேன், நீங்கள் இளித்துக் கிடவுங்கள்! எனக்கு மானம் பெரிது, உயிர் அல்ல; உயிரை இழக்கிறேன்! உலுத்தருக்கு உயிர்தான் வெல்லம், அதைச் சுமந்துகொண்டு திரியுங்கள்! சவத்துக்கும் உயிர் உள்ள சடத்துக்கும் என்ன மாறுபாடு? உணர்ச்சிதானே, இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுவது! உணர்ச்சியற்றுக் கிடக்கும் உம்மை மாந்தர் என்றும் மறத்தமிழர் என்றும் கூற என் நா, கூசுகிறது! இதோ இனி நான் பேசப்போவதில்லை! போகிறேன், பொல்லாங்கும் பழியும், புல்லர் வாழ்வும் பூசலும் நிரம்பிய இந்த இடத்தைவிட்டே அகன்று செல்கிறேன்! சாக்கடையில் நீங்கள் உழலுங்கள், சாக்காடு எனக்குச் சாந்தி அளிக்கட்டும்! பதைக்கிறீர்கள் துடிக்கிறீர்கள்; ஆஹா என்கிறீர்கள், ஆகட்டும் என்று ஆர்ப்பரிக்கிறீர்கள்; யார் தெரியுமா என்று உருட்டுகிறீர்கள், என்ன செய்வேன் தெரியுமா என்று மிரட்டுகிறீர்கள்; எல்லாம் எதற்கு? ஒரு சிறு பொருள் உம் கரத்தைவிட்டுப் போவதானால்! ஒரு சிறு சொல் உம்மீது எவனேனும் வீசுகிறானென்றால்! சுயநலத்துக்குக் குந்தகம் விளைகிறது என்றால், சூரத்தனமாகக் கிளம்புகிறீர்கள், போராடுகிறீர்கள்! தாயகம் பழிக்கப்படுகிறது, தாயகம் இழிநிலை பெறுகிறது, ஏன்என்று கேட்கும் துணிவு இல்லை உங்கட்கு! தாயகம்



# கடைசிவரை மாறாதகல்நெஞ்சமோ அஃது!

தருக்கரின் காலடியில் சிக்கிச் சீரழிகிறது; தடுத்திடும் ஆற்றல் இல்லை உங்களுக்கு! மொழி அழிக்கப்படுகிறது, உமது விழியிலே நீர் சோரக்கூடக்காணோம். தன்மானம் அழிக்கப்படுகிறது, தடுத்திடக் கிளம்புகிறீர்களா? இல்லை! தாளேந்திக் கிடக்கிறீர்கள்! நத்திப் பிழைத்திடவும், நமக்கென்ன என்று ஒதுங்கிக் கிடக்கவும், நம்மால் ஆகுமா என்று பெருமூச்செறியவும் கற்றீரேயன்றிக் கடமை உணர்ச்சியை எங்கே கொண்டீர்! வீரர் வழிவந்தோரே! வெற்றி முரசு கொட்டினோரே! தமிழர்காள்! தரணிபுகழப் பரணி பாடிய பரம்பரையினரே! கடலில் கலம் செலுத்தி, கரிப்படை கொண்டு கருங்கற் கோட்டைகளைத் தூளாக்கி, வேற்படை கொண்டு மாற்றாரை விரட்டி, வாகை சூடிய வெற்றி விரர் வழிவந்தோரே! என்றெல்லாம், ஏடு உம்மைக் குறித்து குறிப்பிடுகிறது; நாடு நலியக்கண்டும், வலியோர் சிலர் எளியோர்தமை வாட்டிடக் கண்டும் வாய் திறந்து கேட்கவும் வக்கற்றுக் கிடக்கிறீர்! உம்மோடு, நான் இருக்கச் சம்மதியேன்! உம்மில் ஒருவனாக இருக்க என் மனம் இடம்தரவில்லை! நான் பிணமாகிறேன், பேசும் பிணங்களே! குடும்பம் அழைக்கிறது, சென்று குதூகலமாகக் காலங்கடத்துங்கள், குட்ட வருவான் கொடியோன்! குனிந்து கிடவுங்கள், குறை கூறாதீர்கள். குண்டாந்தடியுடன் வருவான், கோலோச்சுவோரின் ஏவலன், இழிவாகப் பேசுவான், இனிமை, இனிமை! என்று கூறுங்கள்—இல்லையெனில் இருட்டறையில் தள்ளிப் பூட்டிவிடுவான்! வாழவேண்டுமே என்பீர், வாழுங்கள் வாழுங்கள், மானம் இழந்து உரிமை இழந்து, உணர்ச்சி இழந்து, உயிரைச் சுமந்து கொண்டு உலவுங்கள்! என்னால் முடியாது! இதோ, நான் மரணத்தைத் தழுவிக்கொண்டேன்! மலர் தூவிய மஞ்சம் உமக்குக் கிடைக்கக்கூடும், மானத்தை இழந்த பலருக்குக் கிடைக்கும், எனக்கு இந்த நெருப்புப் படுக்கை போதும்! பிடிசாம்பலாகிறேன்! பேதையாய், தலையாட்டிப்பதுமையாய், அடிமையாய்க்கிடந்து உழல்வதைக் காட்டிலும், பெருநெருப்புக்கு என்னை ஒப்படைத்துவிடுவது சாலச் சிறந்தது! எனவே, நான் செல்கிறேன், நீங்கள் பூச்சி புழுக்களும், சீச்சீ என்று இகழ்ந்திடும் விதத்தில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு கிடவுங்கள்! — என்று நம்மை நோக்கி, பெருநெருப்பில் கிடத்தப்பட்டுள்ள பெரிய'வர் பேசுவது போன்றதோர் பிரமை ஏற்படுகிறது! அவர் இதுபோலெல்லாம் நம்மை ஏசியிருக்கக்கூடாதா — ஏசியிருந்தாலாவது ஒருவகையில், நன்றாக இருந்திருக்கும்—அந்தப் பெருங்குணவான், ஒருதுளி ஏசினாரில்லை, நமது இழிநிலை கண்டு இரக்கப்பட்டு இறந்துபட்டேனும், நமக்கு உய்யும் வழி கிடைத்திடச் செய்வோம் என்று எண்ணினாரேயன்றி, ஏடா! மூடர்காள்! என்று சினந்துகொண்டாரில்லை! இறந்துபட்டார்—நமக்காக இறந்துபட்டார்—நாட்டுக்காக உயிர் துறந்தார் — நாமெல்லாம் நடைப்பிணமாகிவிட்டோம் என்பதறிந்து வேதனையுற்றார்—உயிர் துறந்தார்—உயிர் போகிறது—போய்க்கொண்டே இருக்கிறது என்று அறிந்தார்—விநாடிக்கு விநாடி மரணவாயிலை நெருங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தார் — சாவை வரவேற்றார்! நாம் வாழ்கிறோம்! வெட்கமின்றி, வாழ்ந்துகொண்டு கிடக்கிறோம் — வெந்து சாம்பலாகிவிட்டார் அந்த வீரத்தியாகி! எண்ணும்போது, இதயத்தை யாரோ சம்மட்டி கொண்டு தாக்குவது போலாகிவிடுகிறது. இந்த நடுநிசியில், என் நெஞ்சம் நடுக்குறுகிறது, எண்ணம் ஈட்டியாகிவிடுகிறது — எரிதழல் தெரிகிறது — தியாகியின் உடல் அதிலே கிடப்பது தெரிகிறது; ஓர் கேலிச் சிரிப்பொலிகூடக் கேட்கிறது—ஓஹோ! நீ விடுதலைப் படைவரிசையில் உள்ளவனல்லவா? உரிமை முழக்கமிட்டுக்கொண்டு ஊரூரும் அலைபவனல்லவா? தமிழர், தமிழர் என்று மார்தட்டித் தட்டிப் பேசுபவனல்லவா? அகம் என்பாய், புறம் என்பாய், ஆற்றல் என்று கூறுவாய். என் ஆன்றோர், சான்றோர் என்று புகழ்பாடுவாய், அல்லவா? என்று கேட்டுவிட்டுக் கேலிச் சிரிப்பொலி கிளப்பி என்னை வாட்டி வதைக்கிறது. நான் மனக்கண்ணால் காணும் அந்தக் காட்சி. இந்த நடுநிசியில், என்போல் இதுபற்றி எண்ணி எண்ணி நெஞ்சு புண்ணாகிக்கிடப்போர் எண்ணற்றவர்கள் என்பதும் தெரிகிறது. ஆனால் எனக்குத் துக்கம் மட்டுமல்ல; வெட்கம் என்றேன்! உண்மையிலேயே நான் வெட்கப்படுகிறேன் — ஏனெனில் இத்தகைய வீரத்தியாக உள்ளம் கொள்ளமுடியுமா உன்னால் என்று எவரேனும் என்னைக் கேட்டுவிட்டால், நானென்ன பதில் அளிக்க முடியும்! தலையைக் கவிழ்த்துக்கொள்ளத்தான் வேண்டும் — பலகோடி மாந்தரில் ஒருவருக்கு மட்டுமே கிட்டக்கூடியது அந்த வீரத்தியாக உள்ளம், விருதுநகர் சங்கரலிங்கனார் அதனைப் பெற்றிருந்தார், பேதை நான், அதனை உணர்ந்துகொள்ளும் ஆற்றலும் பெற்றேனில்லை! அவர் இறந்துபடுவார் என்று எனக்கு எண்ணவே இயலாது போயிற்று. அவரை நான் கண்டேன். எனினும் அவர் இறந்துபட நேரிடும் என்று எண்ணவில்லை — காரணம், நானோர் ஏமாளி, நாடு அவரை அந்த நிலை செல்லவிடாது, நாடாள்வோர் அவரைக் கைவிடமாட்டார்கள். அந்த அளவு கேவலத் தன்மை நாட்டைப் பிடித்துக்கொண்டில்லை, அவர் கடைசிக் கட்டம் செல்லும் வரையில் கூடக் கன்னெஞ்சம் கொண்டிருப்பர், பிறகோ, பழிபாவத்துக்கு அஞ்சியேனும், பிற்காலத்துக்குப் பயந்தேனும், அறிவுலகம் ஏசுமே என்று எண்ணியேனும், அவர் 'சாவதை'த் தவிர்த்துவிடுவதற்கான தக்கமுறையினை மேற்கொள்வர், என்று என் பேதை நெஞ்சு எண்ணிற்று! பெருநெருப்புக் கிளம்பிற்று, அந்தோ! அந்த வீரத்தியாகியை அணைத்துக்கொண்டது—சங்கரலிங்கனார் நம்மைவிட்டுப் பிரிந்தார்.

எனக்கு, அவரை. இதற்குமுன் தெரியாது—நாடு அவர் புகழ் பாடிட அவர், 'நடுநாயகமாக' இருந்திடவில்லை—எனினும் இன்று நடுநாயகங்களாகிவிட்ட பலருக்கு அவர்போன்றாரின் ஆற்றல்மிக்க தேசத்தொண்டு பயன்பட்டு வந்திருக்கிறது; நீண்டகாலமாகக் காங்கிரசில் பணியாற்றியவர், காமராஜர் கதர் அணியக்கிளம்பு முன்பே கைராட்டையில் நூல் நூற்றவர்; காந்தியார், மகாத்மா ஆகிக்கொண்டிருக்கும்போது, உடனிருந்து அந்த உயர்வு உருவாவது கண்டு உளமகிழ்ந்தவர், வந்தேமாதரம், தேர்தல் தந்திரமான பிறகு அல்ல; அஃது தேசிய மாமந்திரமாக இருந்த காலத்திலேயே, அந்தக் குறளைக் கூறிக் களித்தவர் சிறை சென்று நலிந்தவர்' வணிகத் துறையிலும் அவருக்கு [illegible] தான்; சங்கரலிங்கனார், பழம்பெரும் தேசபக்தர் வரிசையைச் சேர்ந்தவர்.

இன்றைய நிதி மந்திரிகளுக்கும் சோப்புச் சீமான்களுக்கும், அவரைத் தெரிந்திருக்க முடியாது.

# கொடி பறந்தது! உயிரும் பிரிந்தது!

மாணிக்கவேலர்கள், அவர்பற்றிக் கேள்விப் பட்டிருக்க முடியாது.

நிச்சயமாக சேதுபதிகளின் பார்வையில் அவர் பட்டிருந்திருக்கமுடியாது.

இவர்களெல்லாம், நாடு குறித்துக் கவலைகொள்ளும் பக்குவம் பெறுவதற்குப் பன்னெடு நாட்களுக்கு முன்பே, சங்கரலிங்கனார் 'சத்யாகிரகி' ஆகிவிட்டார்! ஆனால் அவர் சபை நடுவே இடம் பிடித்திடும் 'சத்காரியத்தில்' ஈடுபடவில்லை. கமிட்டிகளைக்கைவசப் படுத்தும் வித்தையில் ஈடுபட்டாரில்லை! 'தலைவர்' ஆக மறுத்துவிட்டார்; தன்னலமறுத்து, தாய் நாட்டுக்காகப் பணியாற்றி விடுதலை விழாகண்டு, வெற்றிக் களிப்பு பெற்று, பெறவேண்டிய பேறு இதனினும் வேறு உண்டோ என்றெண்ணிப் பெருமிதம் கொண்டு இருந்த ஒரு பெரியவர்.

தாயின் மணிக்கொடி பாரீர்!
அதைத் தாழ்ந்து புகழ்ந்து பணிந்திட வாரீர்!

என்ற தேசிய கீதம் கேட்டு மகிழ்ந்தவர்.

ஏழை என்றும் அடிமை என்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதர் என்போர்
இந்தியாவில் இல்லையே!

என்ற சிந்துகேட்டு, செந்தேன்! செந்தேன்! இதுநாள் வரை நான் கேட்டறியாத கீதம் என்று கூறிக்களித்தவர்.

தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்

என்ற வீரக்கவிதை கேட்டு, நெஞ்சம் விம்மிடும் நிலையில், ஆம்! ஆம்! அழிந்து பட்டது ஆங்கில அரசு! செவி குளிரக் கேட்கிறது சுதந்திர முரசு! இனி, பசியும் பட்டினியும் கொட்டுமோ!—என்று எண்ணிக் களிநடம் புரிந்தவர்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் இண்டு கொழுத்திருப் போரை
நிந்தனை செய்வோம்.

என்ற கீதம், ஊரூரும் பாடிடத் தேச பக்தர்கள் கிளம்பிடக்கண்டு, இனி என் நாட்டுக்குப் புது வாழ்வு நிச்சயமாகிவிட்டது! பொழுது புலர்ந்தது, புதுவாழ்வு மலர்ந்தது! என்று பூரித்துக் கூறியவர்.

காங்கிரஸ் அரசாள்கிறது, என்ற நிலைகண்டு, இனி ஜெயமுண்டு! பயமில்லை! மனமே! என்று சிந்துபாடிச் சிந்தை மகிழ்ந்திருந்தார்.

காமராஜர், ஆட்சிப்பீடம் ஏறி அமரக் கண்டதும், பட்டம் பெற்றறியார், பல்கலைக் கழகம் பார்த்தறியார், பாரதமாதாவின் சேவையன்றிப் பிறிதோர் பயிற்சியும் பெற்றார் இல்லை, எனினும், இவர் நாடாள வாய்ப்புக் கிடைத்து விட்டது, பாமர மக்கள் பாராளும் காலம் இது—என்ற கவிதா வாக்கியம், உண்மையாகிவிட்டது; இஃதன்றோ காணக்கிடைக்காத காட்சி என்றெல்லாம் எண்ணி எண்ணி இறும்பூதெய்தி இருப்பார். ஏன் எனில், காமராஜரும், விருதுநகர்—தொண்டர் குழாத்தில் இருந்த தூயமணி!

இவ்வளவு இன்ப நினைவுகளும், பொடிப் பொடியாகும்படியான பேரிடி அவர் நெஞ்சிலே விழுமென்று யார் கண்டார்கள்—

இந்தப் படுபாவிகள் இவ்வளவு மோசமாகிப்
போவார்கள் என்று நாங்கள் எண்ணவில்லையே
எவ்வளவோ பாடுபட்டு, இவர்கள் ஆட்சிக்கு வர
உழைத்தோம்... எல்லாம் வீணாயிற்றே...

என்று என்னிடம் அவர் கூறியபோது, தம்பி, உள்ளபடி, அவருடைய கண்களில் நீர் துளிர்த்துக் கொண்டிருக்கக் கண்டேன். அப்போதுகூட, நான், அவர் இறந்துபடுவார் என்று எண்ணிடவில்லை—காரணம், அவர் அவ்வளவு தெளிவாக, உணர்ச்சி வயப்பட்டவராக என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்—அறுபது நாட்களுக்கு மேலாகிவிட்டது உண்ணாவிரதம் துவக்கி—எனினும் என்னிடம் அரைமணி அளவுக்கு அவர் பேசுகிறார் என்றால், நான் என்ன எண்ணிக் கொள்வது. இப்போதல்லவா எனக்குப் புரிகிறது, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் வேளையிலும் அந்த உத்தமருடைய உள்ளத்தில் அத்துணை உரம் இருந்திருக்கிறது என்ற உண்மை.

இன்றுபோல் அன்றும் நடுநசி—நானும், நண்பர்கள் நடராசன், மதுரை முத்து ஆகியோரும், அவரைக்காணச் சென்றபோது. விருதுநகரில் காங்கிரஸ் தியாகி சங்கரலிங்கம் என்பார், உண்ணாவிரதம் இருந்து வருகிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்தே, எனக்கு அவரைக் காணச் செல்லவேண்டும் என்று ஆவா. அன்றுதான் முடிந்தது,

அந்தத்திடலில், நான் பலமுறை பேசியிருக்கிறேன்—கடைவீதியை ஒட்டி உள்ள மாரியம்மன் கோயில் திடல், வீரம், தியாகம், வாழ்க்கையை அர்ப்பணிப்பது எதற்கும் அஞ்சாமல் கடமையைச் செய்வது, இன்னல் எதுநேரிடினும் கலங்காமலிருப்பது என்பனபற்றி, பலர் ஆற்றலுடன் முழக்கமிடுவதற்காக அமைந்துள்ள திடல்—நானும் அங்கு நின்று பேசியிருக்கிறேன். அந்தத் திடலில், வீரமும் தியாகமும் ஒருருவாகி, சங்கரலிங்கனாராகிக் காட்சி தரும் என்று, யார் எண்ணியிருந்திருக்க முடியும். அந்தத் திடலில் ஒரு சிறு ஓலைக் கொத்துக் குடில் அமைத்துக் கொண்டு, ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது அவர் படுத்துக் கொண்டிருக்கக் கண்டேன். அந்தக் குடிலின்மீது, காங்கிரஸ் கொடி பறந்துகொண்டிருந்தது.

காங்கிரசால் உயர்ந்தவர்கள் ராஜபவனத்தில் சயனித்துக் கொண்டிருக்கக் காண்கிறோம்; கோட்டைகளில் கொலுவிருக்கக் காண்கிறோம்; உல்லாச தோட்டக் கச்சேரிகளிலும், நளினிகளின் நாட்டியக் கச்சேரிகளிலும், உலவிக் களித்திடப் பார்க்கிறோம்; மாளிகைகளிலே பலர் குடி ஏறிடக் காண்கிறோம் காங்கிரசின் துணையினால்; இதோ குடிசையில் படுத்துக் கிடக்கிறார்; உணவு உட்கொள்ள மறந்துத் திங்கள் இரண்டு ஆகிறது, உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில் கிடக்கிறார், காங்கிரசை வலிவும் பொலிவும் கொள்ளச் செய்யும் தொண்டாற்றிய வீ[illegible]முதியவர்.

காங்கிரஸ் கொடி, அந்தக் குடிலின்மீது பறந்து கொண்டிருக்கக் கண்டதும், தம்பி, எனக்குச் சொல்லொணாத வேதனைதான்! உள்ளே உயிர் போகட்டும், கவலையில்லை, உணவு உட்கொள்ளப் போவதில்லை—

# கோரிக்கை சரிதான், கொடுத்தது என்ன?

என்று கூறிக்கொண்டு ஒரு முதியவர் சாகும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறார் — அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டதே, காங்கிரஸ் ஆட்சி, அலங்கோலங்களைப் போக்கிக்கொண்டு, அறவழி நிற்கவேண்டும் என்பதற்காக; அந்தக் குடிலின்மீது, அவர் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கும் கொடுமையை விளக்கவா, காங்கிரஸ் கொடி பறந்து கொண்டிருக்க வேண்டும்!

நடுநிசி—எனவே அங்கு நான்கைந்து பேர் மட்டுமே இருந்தனர்—ஒரு திரை போடப்பட்டிருந்தது. குடில் வாயிலில்—அதை நீக்கியபடி உள்ளே சென்று பார்த்தேன்—கயிற்றுக் கட்டிலின்மீது சுருண்டு படுத்திருந்த உருவம் தெரிந்தது—மங்கலான விளக்கொளியில், எனக்கு அவருடைய முகம் தெளிவாகத் தெரியவில்லை! சில விநாடி உற்றுப் பார்த்த பிறகே தெரிய முடிந்தது.

அமைதி குடிகொண்டிருந்த இடம்; நாங்கள், சத்தம் ஏதும் எழலாகாது அவருக்குச் சங்கடம் ஏற்படும் என்று எண்ணிக் கொண்டபடி உடன் வந்த தோழரை, எழுப்பாதீர் ஐயா! என்று ஜாடை காட்டிச் சொன்னோம். அவரோ, தியாகத் திருவைத் தொட்டுத் தட்டினார். சங்கரலிங்கனார் கண் திறந்தார் — தூக்கமல்ல சோர்வினால் செயலற்றுப்போன நிலை.

'ஐயா! அண்ணாத்துரை...'' என்றார் அந்த நண்பர், ஒரு விநாடி அவர் என்னைப் பார்த்தார்—அந்தப் பார்வையின் முழுப்பொருளை 'பாவி' நான், அன்று சரியாக உணர்ந்துகொள்ள முடியவில்லை! செத்துக்கொண்டு இருக்கிறேனடா, செயலறியாதவனே! என்பதல்லவா அந்தப் பார்வையின் பொருள்.

மிகப் பெருங்குணம் வாய்ந்தவர் அந்தப் பெரியவர்.

''அண்ணாத்துரை...'' என்று அந்த நண்பர் சொன்னதும், என் இரு கரங்களையும் பற்றிக்கொண்டார் — அவருடைய முகத்தருகே என் கரங்கள் — கண்ணீர் கரத்தில் தட்டுப்பட்டது. என் கண்கள் இருண்டுவிடுவது போன்றதோர் நிலை ஏற்பட்டது.

'தலைமாட்டிலே' நான் உட்கார அவர், இடம் செய்து தர, சிறிது, நகர்ந்தார்—நான் அமர்ந்தேன்—அவருடைய போர்வை கலைந்தது, எலும்புக் கூடாகத் தெரிந்தார். பழுத்த பழம்! பேரப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு காலந் தள்ளிக் களித்திட வேண்டிய வயது—உண்ணாவிரதம் மேற்கொண்டு அறுபது நாட்களுக்கு மேலாகிவிட்டன. பச்சைத் தமிழர்தான் பரிபாலனம் செய்கிறார். பாதி உயிர் போய்விட்டது என்று கூறாமற் கூறிக்கொண்டு குமுறிக் கிடக்கிறார், காங்கிரஸ் ஆட்சியைக் காணவேண்டும் என்பதற்காக, கடமை உணர்ச்சியுடன் தொண்டாற்றித் தொண்டு கிழமான அந்தத் தூயவர்.

அவர், உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கான காரணங்களை விளக்க வெளியிட்ட அறிக்கையையும், அவர் வெளியிட்ட கோரிக்கைகளையும் நான் பார்த்திருக்கிறேன் — அதிலே ஒன்றுகூட சொந்த நலன் பற்றியது என்று சுட்டிக் காட்ட, சூட்சித்திறன் மிக்கோரால்கூட, முடியாது. நாடே கேட்கும் கோரிக்கைகள். நல்லோர் எவரும் மறுக்க முடியாத கோரிக்கைகள். நாடாள்வோரின் கவனத்துக்கு நாள் தவறாமல் பல கட்சிகளும் வைத்த வண்ணம் இருக்கும் கோரிக்கைகள். இவைகளை நிறைவேற்றி வைப்பதாலே,

காங்கிரஸ் ஆட்சி அழியாது
இந்திய ஐக்யம் பாழ்படாது
எந்த வகுப்பாருக்கும் கேடு வராது
பெரும் பணச் செலவு ஏற்படாது
சட்டச் சிக்கல் எழாது

மாற்றுக் கட்சிகளுக்கு மணிமகுடம் கிடைத்துவிடாது;

பச்சைத் தமிழரின் பரிபாலனத்துக்குக்கூடக் குந்தகம் ஏதும் நேரிட்டுவிடாது.

அவர் கோரிக்கை மொத்தம் 12—அதிலே 10, மத்திய சர்க்காரைப் பொறுத்தது, இரண்டே இரண்டுதான், மாகாண சர்க்கார் சம்பந்தப்பட்டது—என்று திருப்பூரில் முதலமைச்சர் என்ற முறையில் காமராஜர், விளக்கம் அளித்திருக்கிறார்.

முதலமைச்சர் பேசினார், காங்கிரஸ்காரர் பேசவில்லை!

மந்திரிப் பதவி பேசிற்று, மனிதாபிமானம் பேசவில்லை.

விளக்கம் தரப்பட்டது, இதயம் திறக்கப்படவில்லை.

கேட்டது 12 — அதில் 10 மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது என்று சட்ட நுணுக்கம் காட்டும் முதலமைச்சர் செய்தது என்ன? சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை டில்லிக்கு அறிவித்தாரா? அறிவித்து ஆவன செய்வதாக அந்தப் பெரியவருக்குத் தெரிவித்தாரா? தெரிவித்துவிட்டு, என்றால் ஆனதைச் செய்வேன் என்று வாக்களித்தாரா?

இல்லை! இல்லை! இப்போது விளக்கம் அளிக்கிறார்!

நாம் எதைச் சொன்னாலும் கேட்டுத் தீரவேண்டிய பக்குவத்தில் நாடு இருக்கிறது. நமக்கென்ன என்று பேசினாரேயன்றி. இதயத்திலிருந்தா எண்ணம் வெளி வந்தது?

மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட பத்து இருக்கட்டும் —இவர் சம்பந்தப்பட்ட இரண்டு இருக்கிறதே அதற்கென்ன பதில் அளித்தார்! இப்போது விளக்கம் அளிக்கிறார். இவருடைய விளக்கம் அந்த வீரத் திருவிளக்கு அணைந்த பிறகு வெளிவந்திருக்கிறது. எத்துணை அன்பு ததும்பும் நெஞ்சம், தம்பி, நமது முதலமைச்சருக்கு. எனக்குப் பழக்கமில்லை; உனக்குத் தெரிந்திருக்காது, சங்கரலிங்கனாரை, காமராஜருக்குத் தெரியாதா. இப்போது காமராஜர், காரில் போவார், நடந்துசெல்லும் நண்பர்களைக் கண்டு உறவாட இயலாது; முதலமைச்சர் என்ற முறையில் அது முடியாததாகி விட்டிருக்கக்கூடும்; முன்பெல்லாம், கடைவீதியில் கண்டிருப்பாரே. அந்தக் கடமையாற்றிய வீரரை, திடலில் பார்த்திருக்கக்கூடுமே அந்தத் தியாகியை! விருதுநகர்தானே அவர் இருப்பிடம்! ஏன், சங்கரலிங்கனாரின் மாண்பை மறந்திடத் துணிந்தார்? யார் கேட்கமுடியும்? ஆச்சாரியாராக இருந்தால் கேட்கலாம்—கேட்கலாமா—கடாவலாம் சாடலாம், கிளர்ச்சி செய்யலாம், கவிழ்த்தே விடக் கிளம்பலாம்—காமராஜர் பச்சைத் தமிழராயிற்றே! சங்கரலிங்கனார் உயிர்த் தியாகம் செய்துகொண்டாரே, என்பாய். ஆமாம்—என்ன செய்வது — பரிதாபமாகத்தான் இருக்கிறது—இருந்தாலும்...! தம்பி! இப்படிப்

# ‘பாறை’ நெஞ்சோடு பாராள வந்தாரோ?

பேசிட முடிகிறதே. இன்று இப்படிப்பட்ட தமிழகத்தில், எப்படி இருப்பார், சங்கரலிங்கனார். மரணம் மேல், என்றார்.

> ‘‘ஐயா! இன்றைய ஆட்சி கருணைக்குக் கட்டுப்படுவதாகக் காணோமே. ஆட்சியை நடத்தும் கட்சி, இது பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லையே; எத்துணை பயங்கரமான பலி கொடுத்தாலும், திருந்தும் என்று தோன்றவில்லையே. இந்த ஆட்சியிலே, உண்ணாவிரதம் இத்துணை உறுதியுடன் இருக்கிறீரே,,,பலன் இராதே...’’

என்று நான் கூறினேன்—தட்டுத்தடுமாறிக்கொண்டு தான்—அவரோ அனுபவமிக்கவர்; நான் பள்ளிச்சிறுவனாக இருந்த நாட்களிலேயே பரங்கி ஆட்சியை எதிர்த்திடும் பணியில் ஈடுபட்டவர். அவருக்கு நான், யோசனை கூறுவது என்றால், சரியான முறையாகுமா என்ற அச்சம் என்னைப் பியத்தது. இவ்வளவு இன்னலை இந்தத் தள்ளாத வயதிலே அனுபவிக்கத்தான் வேண்டுமா என்று நான் பதறியதால் கேட்டேன், தம்பி! அவர் சொன்ன பதில், என்னைத் திடுக்கிட வைத்தது, அப்போது; இப்போது கண்களைக் கலங்கச் செய்கிறது; இல்லை...நான் செத்துவிடுகிறேன்... பிறகாவது பார்ப்போம் ...சண்டாளர்கள்...எவ்வளவோ கண்டித்துக் காட்டுகிறீர்கள் ...திருந்துகிறார்களா...என்று அவர் சொன்னார். நெஞ்சு உலர்ந்ததை அறிந்து, பக்கத்தில் ஒரு நாற்காலிப் பலகை மீது இருந்த தண்ணீர்க் குடத்தைப் பார்த்தார். மண்பாண்டம் தப்பி! குளிர்ந்த தண்ணீர்! பக்கத்தில் ஒரு முழுங்கு தண்ணீர் மட்டுமே கொள்ளத்தக்க சிறு மண்குடுவை! அதிலே தண்ணீர் நிரப்பி, அவர் வாயருகே கொண்டு சென்றேன்—நாகரீக உணர்ச்சியை அந்த நேரத்திலும் காட்டியதைக் கேள் தம்பி—அந்தக் குடுவையை அவர் தம் கரத்தால் வாங்கி, இரண்டு கரண்டி அளவு தண்ணீர் பருகினார்.

பிறகு, அவர், மெள்ளப் பேசலானார்—எனக்கு, அவருக்குக் களைப்பு மேலிட்டுவிடுமே என்று பயமாக இருந்தது; அவரே, தமக்கு ‘முடிவு’ விரைவிலே இருக்கிறது என்ற எண்ணத்திலோ என்னவோ, என்னிடம் பேசவேண்டியதைப் பேசிவிட வேண்டியதுதான் என்று எண்ணிக்கொண்டவர் போலப் பேசினார்.

> எல்லையை வாங்க முடியாதா?
>
> இதில் என்ன கஷ்டம்?
>
> இதய சுத்தியோடு இரண்டு மணி நேரம் ஆந்திர சர்க்காருடன் பேசினால், காரியம் நடக்காதா...?

என்று கேட்டார்...பதில் நானா கூறவேண்டும்...நாடு அல்லவா அந்த நல்லவரின் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும்.

> கவர்னருக்கு ஏன் இலட்ச இலட்சமாகச் சம்பளம்? ஒரு வடநாட்டான்...நீங்கள் கண்டித்தீர்கள்...நியாயம்...ஏன், வீண் செலவு...பிரமாதமான வேலையாம். கவர்னருக்கு...காலணா செலவில்லாமல், கச்சிதமாக எங்கள் வி வி சண்முக நாடார் பார்ப்பாரே, இந்த கவர்னர் வேலையை
>
> .........

என்று, அவர் கூறியபோது, நான் உருகிப்போனேன்.

சங்கரலிங்கனார், காங்கிரஸ்காரர் — என்றாலும், காரியமாற்றும் ஆற்றல் கொண்டவர் வி. வி. சண்முகம், எனவே அவர் காங்கிரஸ்காரராக இல்லாது போயினும் பரவாயில்லை, என்று எண்ணிய அரசியல் கண்ணியம் என்னை உருகச்செய்தது.

எனக்கும் அவர், பேசப்பேச, நாம் அவருக்கு மெத்தச் சங்கடம் தருகிறோமே. என்ற பயமே மேலிடத் தொடங்கிற்று, அவரோ பேசுவதையும் நிறுத்திக் கொள்ளவில்லை, என் கரங்களையும் விடவில்லை.

இந்த அளவுக்கு அவர் பேசினதாலேதான், நான், அவர் உயிருக்கு ஆபத்து இராது, என்றுகூட எண்ணிக்கொள்ள நேரிட்டது.

காமராஜர் வரப்போகிறார், இரண்டோர் நாட்களில் என்று நான் கேள்விப்பட்டதால், ஒரு தைரியம் கொண்டிருந்தேன் — காமராஜர். கனிவுகாட்டுவார், கோரிக்கைகளிலே சிலவற்றையாவது நிறைவேற்றி வைத்து, அந்தக் குணவானுடைய உயிரைக் காப்பாற்றிவிடுவார் எனறு எண்ணிக்கொண்டேன்.

நான் கண்டேனா நாடாள வந்தவர்கள் மனதை இரும்பாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை. காமராஜர் அதுபோலவே. மலை குலைந்தாலும் மனம் குலையாத தமிழனல்லவா (!) அதனால், பிணமானாலும் பரவாயில்லை கோரிக்கைகளுக்கு இணங்குவதாககூற மாட்டேன், கூறினால் ‘கௌரவம்’ என்ன ஆவது என்று கருதுபவர்போலத் தம் போக்கால் காட்டிக் கொண்டார்; சங்கரலிங்கனார், எழுபது நாட்களுக்கு மேல் உண்ணாவிரதமிருந்து, மூர்ச்சையாகிவிட்ட பிறகு மதுரை மருத்துவவிடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறைந்துபோனார். அவருடைய உயிர்தான போயிற்றே தவிர, முதலமைச்சர் பதவிக்கு உள்ள ‘கௌரவம்’ இருக்கிறதே, அது போகவில்லை! போகவிடவில்லை காமராஜர் சங்கரலிங்கனார்கள் சாகலாம், பிழைக்கலாம், காமராஜர் முதலமைச்சர் பதவிக்கு உள்ள கௌரவத்தைக் குலைத்துக்கொள்வாரா! உறுதியாக இருந்துவிட்டார்.

> உண்மையிலேயே மோசமாகி விட்டது.
>
> உயிர் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.
>
> பேச்சு நின்றுவிட்டது; ஊமை மூச்சுதான் இருக்கிறது.
>
> எந்த விநாடியும் உயிர்போய்விடக்கூடும்
>
> மேல் முச்சு வாங்குகிறது, கண் மூடிவிட்டது கால் வீக்கம் கண்டுவிட்டது.

தம்பி! ஒற்றர் படையினரும், உற்ற நண்பர்களும். பதவிக்குப் பிறகு பெற்ற தோழர்களும், நிலைமையைக் காமராஜருக்கு, இது போலெல்லாம் எடுத்துச் சொல்லாமலா இருந்திருப்பார்கள். என்ன சொன்னாரோ முதலமைச்சர்!

> அப்படியா...
>
> ஆமாமாம்...
>
> அட, பாவமே...

# தர்மம் வென்றிடும் 'தமிழ்நாடு' வந்திடும்!

நிஜமாவா...

போய்விடும்னே சொல்றாங்களா...

பெரிய தொல்லையாப் போச்சே...

என்ற விதமாகத்தான் அவர் கூறியிருப்பார்; வேறு விதமான பேச்சு இருந்திருந்தால்தான், சங்கரலிங்கனாரை நாடு இழந்திருக்காதே!

துணிவுடன், நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிட்டிருக்கிறார்.

ஏழை அழுத கண்ணீருக்கே பயப்படவேண்டும், நேர்மையான ஆட்சியாளர் என்கிறார்கள். சுடலையில் தீ கொழுந்துவிட்டு எரிந்தது, காமராஜர் ஒரு சொட்டுக் கண்ணீர்விடவும் மறுக்கிறார்—வேறு வேலை நிரம்ப;

நான் சாவதனாலாவது...

என்று அந்த உத்தமர் என்னிடம் சொன்னார்—தமிழர் சமுதாயம் இன்று அடைந்துள்ள சீர்கெட்ட நிலையை உணராது இதுபோலப் பேசுகிறாரே என்று நான் எண்ணி வருந்தினேன்.

பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் இருந்தார்—ஆந்திரம் அலறித் துடித்தது—சங்கரலிங்கனார் சாகக்கிடக்கிறார் என்று தெரிந்து, தமிழகம் என்னக் கோலம் கொண்டிருந்தது — ஒவ்வொரு காங்கிரஸ்காரரையும் உரைத்தும்நிறுத்தும் பார்த்து, எந்தக் 'கோஷ்டி' என்று கண்டறியும் காரியத்தில் ஈடுபட்டிருந்தது!

மதுரையிலும் வேறு இரண்டோர் இடங்களிலும், நமது கழகம் அனுதாபக் கூட்டம் நடத்திற்று.

மற்றப்படி பார்க்கும்போது, தமிழகம், காமராஜ் கோலத்தில்தான் இருக்கிறது!

இந்தத் திங்கள் 21-ம் நாள், தமிழகம் தன் கடமையைச் செய்யும்—நாடெங்கும் அனுதாபக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவகையில் ஆறுதல்தான். ஆனால், தம்பி, அந்த உத்தமர் தம் இன்னுயிரை ஈந்தாரே, நாம் என்ன செய்யப்போகிறோம்.

தமிழ் நாடு என்ற பெயர் பெறுவதற்காவது நாம் முனைந்து நிற்கவேண்டாமா?

ஒப்பற்ற ஒரு உத்தமரின் தியாகம், இதற்குக் கூடவா வழி ஏற்படுத்தாது.

சங்கரலிங்கனாரைத்தான் சாகடித்துவிட்டீர்கள் உங்கள் அலட்சியப்போக்கினால்; அவருடைய உள்ளத்தில் ததும்பிக் கொண்டிருந்த ஆசையில், ஒன்றே ஒன்றையாவது. தமிழ்நாடு என்ற பெயர் தரும் காரியத்தையாவது செய்யக் கூடாதா என்று காங்கிரஸ் ஆட்சியைக் கேட்கும் அளவுக்காவது தமிழகம் செயல் படலாகாதா?

அந்தோ! அருமைத் தியாகியே! தமிழகத்திலேயன்றோ. உன் அரும்பெரும் தியாகம் கண்டனர்.

தாசர் புத்தி தலைக்கேறிவிட்ட தமிழகமாயிற்றே!

தருக்கரிடம் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் தமிழகமாயிற்றே!

உண்மைத் தியாகத்தின் உயர்வு அறியாத உலுத்தர்கள் உயர் இடம் பிடித்துக் கொண்டு, அன்பு, அறம் ஏது? வீரம் எங்ஙனம் எழும்? நீதிக்கு வழி ஏது? நிமிர்ந்துநின்று உரிமை பேசுவோர் யார்?

என்றெல்லாம் அழுதபடி கேட்கத் தோன்றுகிறது.

அண்ணா! அப்படி ஒரே அடியாகத் தமிழகத்தைத் தாழ்த்திவிடாதே—தமிழகம் தயக்கமடைந்திருக்கிறது, உண்மை; ஆனால் உத்தமரின் உயிர்த்தியாகம், தமிழகத்தின் கண்களிலே குருதி பீறிட்டுவரச் செய்திருக்கிறது; கட்சிபேதமின்றி, இந்தக் கட்டத்தில், சங்கரலிங்கனாரின் தியாகத்தை நினைவிற்கொண்டு, தமிழ்நாடு என்ற பெயர் கிடைக்கச் செய்வதற்கான கிளர்ச்சியினைத் துவக்க ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் ஒரு அணி வகுப்பாகுவர், அனுதாபக் கூட்டமே, அதற்கான நாளாகும்.

அந்தச் சூள் உரைத்திடும் நாளாக அமையும்—என்று கூறிடும் எண்ணற்ற தம்பிகளைக் காண்கிறேன். அவர்களிடம் எனக்கு நிரம்ப நம்பிக்கையும் உண்டு.

வீரத்தியாகி சங்கரலிங்கனாருக்கு நாம் அனைவரும் நமது நெஞ்சு நெக்குருக வணக்கம் கூறுகிறோம்.

அவர் காட்டிய தியாகப் பாதையில் செல்வதென்பது அனைவருக்கும் சாத்தியமானதல்ல. ஆனால் அவருடைய தியாகத்தை மதிக்க மறுப்பவர், மறந்து திரிபவர், தமிழராகார், மனிதராகார்.

தமிழகம் விடுதலைபெறுவதற்கே இந்த வீரத் தியாகம் பயன்படப் போகிறது.

பிறபிற இடங்களில், இத்தகைய சம்பவம், கலகத்துக்கு பலாத்காரத்துக்கு வழிகோலும்—காண்கிறோம்,

தமிழகத்தின் முறை தனித் தன்மை வாய்ந்தது; அறவழியின்படி உள்ளது.


அறம் வெல்லும் நிச்சயமாக வெல்லும்; அறம் ஆர்ப்பரிக்காது. அத்துமீறிய காரியத்துக்கு மக்களைச் செலுத்தாது; அதன் பயணம் துரிதமானதாக இராது—ஆனால் தூய்மையானதாக இருக்கும்.

அறம் நிச்சயமாக வெல்லும்—ஆனால் அது கடுமையான காணிக்கைகளைக் கேட்கும்.

மிகக் கடுமையான காணிக்கை தரப்பட்டாகிவிட்டது; வீரத் தியாகி உயிரை அர்ப்பணித்தார்.

தமிழக விடுதலைக்காக, நாமும் காணிக்கை தரத் தயாராக வேண்டும்; அந்தப் பக்குவம் நமக்கு ஏற்பட வேண்டும்; வீரத் தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை தியாக சுபாவத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். தியாகிக்குத் தலை வணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்.

அண்ணன்,



(21—10—56 திராவிட நாடு இதழில்)

# ‘இரவல் நகை’

—வே. ம. நாராயணன்—

“சரசு, உன்னிடம் ஒன்று கேட்கலாம் என்று வந்திருக்கிறேன். கேட்டால் கிடைக்குமா?” சரசுவின் முகத்தையும் கழுத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி கேட்டாள் ராதா.

“கிடைக்குமா — கிடைக்காதா? என்பதை முன்கூட்டியே எப்படிச் சொல்ல முடியும்? உனக்கு வேண்டியதைக் கேள்...என்னால் முடிந்தால் தருகிறேன்...” ‘என்னவேண்டும்?” என்ற பாவனையில் ராதாவைப் பார்த்தபடி கூறினாள் சரசு.

“ஒன்றுமில்லை சரசு...வந்து...’ மேலே தொடர முடியாமல் தயங்கினாள் ராதா.

“என்ன ராதா? சும்மா சொல்லு! யாரோ அறிமுகம் இல்லாதவளிடம் பேசுவதுபோல் அல்லவா பேசுகிறாய்? தயங்காமல் கேள். தரக்கூடியதாயிருந்தால் தாராளமாகத் தருகிறேன்...”

“வேறு ஒன்றுமில்லை சரசு வருகிற ஞாயிற்றுக்கிழமை என் சித்தப்பா மகளுக்குக் கல்யாணம், நான் கண்டிப்பாகப் போயாக வேண்டும். ஆனால், என் வீட்டுக்காரர் என்னை இது மாதிரி விசேடங்களுக்குப் போய் வருகிற மாதிரியா வைத்திருக்கிறார்? அதனால்தான் உன்னிடம் வந்திருக்கிறேன்...”

“அதனால் என்ன? ஏன் ஏதாவது அவசரத் தேவையாக...” பணம் தேவையா என்பதை யறிந்து கொள்வதற்காக இழுத்தாள் சரசு.

அதைப் புரிந்துகொண்ட ராதாவும் “அப்படி யெல்லாம் எதுவும் இல்லை, அதற்குப் பதிலாக, உன்னுடைய சங்கிலியையாவது, நெக்லசையாவது கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். நான் கல்யாணம் முடிந்து வந்தவுடனே முதல் வேலையாகத் திருப்பித் தந்து விடுகிறேன்” என்று சொல்லிவிட்டு, அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றாள்.

ராதா நகையைப் பற்றிப் பேச்செடுத்ததுமே, சரசுவிடமிருந்த புன்னகை மறைந்தது. அதைக் கண்டதுமே, ராதாவின் தலை தாழ்ந்தது. முகம்கூட மாறியது. சிறு ஏமாற்றம் என்றாலும் உடனே வாடிப் போவது பெண்மையின் வாடிக்கையாயிற்றே!

“ராதா, வந்து...நீ என்னைத் தப்பா நினைக்காதே...” என்று தயங்கியபடி ஏதோ ஆரம்பித்தாள் சரசு.

கேட்பவளும் தயங்கினாள். கேட்பதற்குத் தயக்கம் வேண்டியதுதான்! ஆனால் மறுப்பவள்கூடத் தயங்குகிறாளே ஏன்? ‘இல்லை’ என்பதைக் கூட நேரடியாகக் கூறும் அளவிற்குச் சம்பிரதாயம் இடம் கொடுக்காததாலா? “பரவாயில்லை!” என்று கூறிவிட்டுப் புறப்பட முயன்றாள் ராதா. அப்போதைக்கு அதைத்தான் செய்ய முடிந்தது அவளால்.

ஆனால் சரசு அவ்வளவு சுலபத்தில் விடுவதாயில்லை! “இதோ பார் ராதா என் மனசு எவ்வளவு சங்கடப்படுகிறது தெரியுமா? நீ கேட்டதுதான் கேட்டாய், ஏதாவது பணம் தேவை என்று கேட்டிருக்கக் கூடாதா? நூறு...இருநூறு என்றாலும் கூடக் கொடுத்திருப்பேன். நீயோ நகையைக் கேட்கிறாய். அதையும் கொடுத்து விடுவேன். உனக்கெல்லாம் கொடுக்காமல் வேறு யாருக்குத்தான் தருவதாம்? ஆனால் என் வீட்டுக்காரர் இந்த நகைகளை வாங்கி வந்த அன்றே, “இதில் ஒரு ரகசியம அடங்கியிருக்கிறது. எனவே, யாருக்கும் இரவலோ, அல்லது பார்ப்பதற்கோ கூடக் கொடுத்து விடாதே” என்று சொல்லியிருக்கிறார். அதனால்தான் யோசிக்கிறேன். எதற்கும் நீ சாயங்காலம் ஒருமுறை வந்து பார், என் வீட்டுக்காரரைக் கேட்டு, எப்படியாவது உனக்கு நகையைத் தர முயற்சிக்கிறேன்” என்று ஆறுதலைப் பரிசாக வழங்கிக் கொண்டிருந்தாள். அவமானம் ஆத்திரமாக உருவெடுக்க, அதை அமைதியெனும் முக்காடிட்டு மறைத்துக் கொண்டு விடை பெற்றாள் ராதா.

அந்தத் தெருவில் தனக்குப்பழக்கமான எல்லாப் பெண்களின் குணாதிசயங்களையும் ஆராய்ந்தபின், இறுதியாகச் சரசுவைத் தேர்ந்தெடுத்த பிறகே அவளிடம் வந்தாள் ராதா. ஆனால் அவள் கூடத் தட்டிக் கழித்து விட்டதால், வேறு யாரிடமும் போய் ‘நகை இரவ’ல் கேட்கும் துணிவில்லாமல் வீட்டையடைந்தாள்.

ராதா வீட்டை யடைந்ததும், கண்களைக் கசக்கியபடியே, கணவன் மீது குற்றச் சாட்டுக்களை அடுக்கத் துவங்கினாள். அடுத்த வீடு—எதிர் வீடு—மூன்றாவது—நான்காவது வீடுகளையெல்லாம் உதாரணமாகக் காட்டி.

“பார்த்தீங்களா? நீங்களும்தான் சம்பாதிக்கிறீங்க...எதுக்கு உபயோகம்? அக்கம் பக்கம் பார்த்தீங்களா? அந்தந்த வீட்டு ஆம்பளைங்க அவுங்கவுங்க பொம்பளைங்களுக்குக் கழுத்துலேயும், காதுலேயும், கையிலேயுமா புதுப்புது மாதிரித் தங்கநகைங்களாச் செஞ்சு போட்டிருக்கறதை? நானும் நாலு வருஷமாகக் கேக்கறேனே, அதுக்காகவாவது ஒரு மோதிரமாவது? ஹூம்...”

“ம் நாலு வருஷம் கேட்டால் என்ன? நாற்பது வருஷம்தான் கேட்டால் என்ன? நம் நிலைமைக்குத் தகுந்ததைத்தான் நான் செய்வேன். அதையும் அவசியம் வரும்போதுதான் செய்வேன்” எப்பொழுதும் போல் சாதாரணமாகக் கூறிவிட்டு, எங்கோ புறப்பட முயன்றான் அவளுடைய கணவன் கனகு.

“ஏதாவது கேட்டால், இப்படிப் பதில் சொல்லிவிட்டுத் தப்பிச்சுக்கறதுதான் உங்களுக்கு வழக்கமாச்சே?”

“அதான் தெரியுமே? பிறகு ஏன் சும்மா எதையாவது பேசிக்கொண்டிருக்கிறாய்?”

“உங்களை மாதிரி இருந்தால் நானும் பேசமாட்டேன். ஆனால் கல்யாணம் அல்லது வேறுவிசேடங்களுக்கு நானல்லவா மத்தவங்க மத்தியில் சும்மா போய் அவமானப் பட்டுத் திரும்பவேண்டியிருக்கு?”

“இப்படி நகையை இரவல்கேட்டு அவமானப்படுவதைவிட, விசேடங்களுக்கு நகைகள் எதுவும் அணியாமல் சும்மாபோய் அவமானப்பட்டு வருவதே மேல்”

“ஓஹோ! அதையும் தெரிந்து கொண்டீர்களா? உங்களால்தானே நான் சாதாரண சரசுவிடம் கூடப் பல்லைக்காட்டி மூக்கை உடைத்துக் கொண்டு வரவேண்டியதாயிற்று. நீங்கமட்டும்...”

கண்களைக் கசக்குவதில் இருந்து தேம்பும்அளவு வளர்ந்தது அவளது ஆத்திரம்.

“இதோ பார் ராதா, நான்தான்

ஆரம்பத்தில் இருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறேனே? நம்மை மதித்து அழைப்பவர்கள் வீட்டிற்கு மட்டும் போய்வா, நகைகளை மதிக்கும் வீட்டிற்குப் போகவே வேண்டாம் என்று. நம்மைப் பற்றியும், நம் நிலையைப் பற்றியும் நம் உற்ருர் உறவினர் அனைவருக்கும் தெரியும். அப்படியிருக்கும் போது நீ யாரிடமாவது நகைகளை இரவல் வாங்கிக் கொண்டு போனுல்கூட 'இது யாருடையது'? 'ஏது அவள் உனக்குக் கொடுத்து விட்டாளே'? என்றுதான் கேட்பார்கள். மேலும், நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதில்தான் கௌரவம் உயரும். வாங்குவதால் கௌரவக் குறைவுதான் ஏற்படும். தெரிந்துகொள்.''

கூறி விட்டு வெளியே சென்று விட்டான் கனகு.

இது ஒன்றும் புதிதல்ல. முக்கியமான வீடுகளில் இருந்து ஏதாவது அழைப்புக்கள் வரும்பொழுதெல்லாம், கனகு—ராதா ஜோடியிடம் நடைபெறும் நிகழ்ச்சிதான்! இதன் காரணமாக, அவர்கள் இருவரும் புறப்பட்ட பயணங்களைக்கூட நிறுத்தியிருக்கின்றனர்.

ஆனுல், ராதாவைப் பொறுத்தவரை இம்முறை பயணத்தை ரத்துச் செய்ய முடியாதே? அவளது சித்தப்பா மகளுக்குக்கல்லவா திருமணம்? அதுவும் அவளுடைய சித்தப்பாவே நேரில் வந்து அழைத்து விட்டுப்போயிருக்கிருரே?

அவள் இதையெல்லாம்தான் நினைத்தாளே தவிர, தன்னுடைய சித்தப்பாவிற்குத் தன்நிலை தெரிந்ததுதானே! என்று நினைக்கவேயில்லை! அவளுடைய நினைவெல்லாம் நகையில்லாமல் எப்படிக் கல்யாணத்திற்குப் போவது? என்பதிலேயே இருந்தது.

பதவி ஆசையில்லாத அரசியல்வாதி இருக்க முடியுமா? அது மாதிரித்தானே பெண்களும்? நகை ஆசையில்லாத பெண்கள் இருக்க முடியுமா?

ராதாவின் கவலைக்கும் காரணமிருந்தது. மின்னும் நகைகளும், பளபளக்கும் பட்டாடைகளும் கூட்டணி அமைத்துக்கொண்டு கண்காட்சி நடத்தப்போகும் இடத்திற்கு வெறும் புன்னகையோடு மட்டும் போய் வருவது காசில்லாதவன் கடை வீதிக்குப் போய்வருவது போன்றதல்லவா?

எனவே, நிறைவேருத ஆசைகளுக்காக அழுவது ஒன்றுதான் ஆறுதல் தரும் என்ற பெண்களின் சித்தாந்தப்படி ஆறுதல் காண முயன்ருள் ராதா.

அதுவரை அங்கு நடந்தவைகள் எல்லாவற்றையும், உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்த வீட்டுக்கார அம்மாள், தனக்கு ஒன்றுமே தெரியாததுபோலக் காட்டிக்கொண்டு ராதாவைக் கூப்பிட்டபடி அங்கு வந்து சேர்ந்தாள்.

அதைக்கண்ட ராதாவும், அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு, அந்த அம்மாளை வரவேற்ருள்.

''என்ன ராதா, கல்யாணத்துக்கு இன்னும் புறப்படலை? ஏன் ஒரு மாதிரியா......''

''ஒன்னும் இல்லேம்மா, வந்து...''

'ஏன் தயங்கறே? சும்மா சொல்லு''

'வந்து, சரசு வீட்டுக்குப் போயிருந்தேன்...''

''அவ கொஞ்சம் 'இது' உள்ளவளாச்சே? அங்கே எதுக்குப் போனே? உனக்கு எதாவது வேணுமின்னு எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லு, சமயத்துக்கு நேர்ந்துக் காம அக்கம் பக்கத்துல இருக்கறதுல என்ன பிரயோசனம்? இப்ப உனக்கு என்ன வேணும்? பணம் காசு ஏதாவது......அல்லது நகை ஏதாவது வேணுமா?'' தன்னைப் பற்றியும், தன் தயாள குணத்தைப் பற்றியும் விளம்பரப்படுத்த, புது ஆதரவாளர் ஒருத்திக்கு வலை வீசினுள் அந்த அம்மாள்.

''நானும் அவகிட்டே வேறு எதுவும் கேட்கலையம்மா, ஒரு சங்கிலியாவது, நெக்லசாவது கொடுத்தால் போதும் என்றுதான் கேட்டேன். அதுக்கே அவ பெரிய கிராக்கி பண்ணிட்டா...''

ராதாவுக்கும் சரசுவைக் குறை கூறி விமர்சனம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது சற்று ஆறுதலாகவே இருந்தது.

இருவரும் சிறிதுநேரம் சரசுவின் குணுதிசயத்தைப் பற்றித் தங்கள் விருப்பம்போல பேசித் தீர்த்துவிட்டு, இறுதியில் பரஸ்பரம் ஒரு விதத் திருப்தியுடனேயே விடைபெற்றனர்,

நான்கு நாட்கள் கழித்து, கல்யாணம் முடிந்து திரும்பி வந்த ராதா, தன் குரலில் நன்றியுணர்வு தொனிக்க வீட்டுக்கார அம்மாளிடம் நகைகளைத் திருப்பித் தரச் சென்ற பொழுது அந்த அம்மாள் ராதாவின் மனம் மகிழும்படியான

---

## அடுத்த இதழில்

## அறிஞர் அண்ணா

அவர்களின்

# நாமாவது.....!

## என்ற தம்பிக்கு மடல்

## இடம் பெறுகிறது.

---

செய்தி ஒன்றை மிக உற்சாகத்துடன் கூறினுள்.

''வா ராதா, இன்னிக்குத்தான் வந்தாயா? எனக்கு விஷயம் தெரியுமா? அந்தக் கர்வம்பிடிச்ச சரசு இருக்காளே அவ வீட்டில திருடன் புகுந்துட்டான். இரண்டுநாள் முன்னுடி எவனே ஒருத்தன் அவவீட்டில நுழைஞ்சு கத்தியைக் காட்டி இருந்த நகையையெல்லாம் பிடுங்கிக்கிட்டுப் போயிட்டான். இப்ப அவ கொட்டம் எல்லாம் அடங்கி வெளியே தலை காட்டறதேயில்லை''

''அவளுடைய போக்குக்கு ஆண்டவனுக் கொடுத்த தண்டனைதானம்மா இது, என்கிட்டேக் கொடுத்தாத் தேஞ்சா போயிடும்? இல்லே நான்தான் அதை முழுங்கிடுவேனு? என்மேல் நம்பிக்கையில்லேங்கறதைச் சுத்திவளைச்சுச் சொன்னு, அதான் இப்ப தானுவே அவளை ஏமாத்திட்டுப் போயிட்டுது.''

தான்பட்ட அவமானம் நிவர்த்தியாகிவிட்ட ஆறுதலுடன் பேசினுள் ராதா.

அந்த அம்மாளிடம் விடைபெற்ற ராதா நேராகச் சரசுவின் வீட்டை நோக்கிப் போனுள். உள்ளூரத் திரு''திப்பட்டாலும் வெளிப்படையாகச் சரசுவிற்கு நாலு வார்த்தை ஆறுதல்கூறி நாகரீகம் தெரிந்தவளாக நடந்து கொள்வதற்காக அதைச் செய்தாள்.

வீட்டிற்குப் பக்கத்தில் போகும் பொழுதே, துக்கம் விசாரிக்கத் தகுந்த முகமாகத் தன் முகத்தை

மாற்றிக்கொண்டு குரலிலும் ஒரு விதச் சோகத்தை வரவழைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

"என்ன சுரசு, உனக்கு இப்படியொரு சந்தர்ப்பம் வரணுமா? நல்ல வேளை உனக்கு ஒரு ஆபத்தும் இல்லையே? எப்படி நடந்தது இது? கேட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை. என் மனம் என்ன பாடு பட்டது தெரியுமா"? மொத்தம் எத்தனை பவுன்? "திருடனைப் பிடித்தாகி விட்டதா?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போன ராதாவை, "வா ராதா உட்கார். கல்யாணம் எல்லாம் முடிந்ததா?" எனறு எப்பொழுதும் போல் அமைதியுடன் கேட்டு உபசரித்தாள் சரசு.

ராதாவுக்கு இலேசான சந்தேகம் கூடத் தோன்றியது, ஒருவேளை தான் கேள்விப்பட்டது தவறான தகவலோ என்று.

அவளுடைய நிலையைப் புரிந்துகொண்ட சரசு "ராதா உன்னிடம் சொல்வதற்கென்ன? நகை பறிபோனது உண்மைதான்! ஆனால் அவைகள் எல்லாம் உண்மையிலேயே தங்க நகைகள் அல்ல! என் வீட்டுக்காரரின் நண்பர் ஒருவர் ஏதோ ஒரு கோல்டு கவரிங் ஓர்க்ஸின் ரெப்பரசென்டேடிவாம். அவருடைய வற்புறுத்தலுக்காக வாங்கியவைதான் அவைகள். அதனால்தான் அன்று நீ கேட்டபொழுதுகூட நான் சமாளிக்க வேண்டியிருந்தது. உண்மையான நகைகளாயிருந்தால், உனக்கும் கூட்டத்தில் கௌரவமாயிருக்கும்! எனக்கும் பெருமையாயிருக்கும்!..."

"சரசு, அப்படியா விஷயம்? நான் கூட உன்னை......" மேலே தொடர முடியாமல் வெட்கத்தால் தலை குனிந்து, தடுமாறிக்கொண்டிருந்தாள் ராதா, இடைமறித்தாள் சரசு, "அது எல்லோருக்கும் இயற்கைதானே? நான் அன்றே உன்னிடம் உண்மையைச் சொல்லியிருக்கலாம். நீயும் வருத்தப்பட்டிருக்கமாட்டாய், ஆனால், சுய கௌரவம் என்று ஒன்று இருக்கிறதே...அது சுலபத்தில் உண்மையைச் சொல்ல அனுமதி கொடுக்காதே? அது கிடக்கட்டும் ராதா, கல்யாணம் எல்லாம் எப்படி? நீ எப்படிச் சமாளித்தாய்?,

சற்றே தயங்கிவிட்டு, வீட்டுக்கார அம்மாளிடம் நகைகள் வாங்கிச் சென்றுவிட்டு திருப்பிக் கொடுத்த விபரத்தைக் கூறினாள் ராதா.

அதைக்கேட்டவுடன், அந்த அம்மாள் கொடுத்த நகைகளின் பெயரையும் அதன் அடையாளத்தையும் கூறி "இவைகளைத்தானே உனக்குக் கொடுத்தார்கள்?" என்று சிரித்தபடியே கேட்டாள் சரசு. ஆமாம்! ஆமாம்! இவைகளேதான். உனக்கு எப்படித் தெரியும்?" திகைத்தாள் ராதா.

"உன்னை ஏமாற்றும் அளவிற்கு எனக்குத் தைரியம் இல்லை. அந்த அம்மாளுக்கு அந்த தைரியம் இருந்தது அவ்வளவுதான்! அதாவது ராதா என் கணவரின் நண்பர் எங்களுக்குக் கொடுத்ததைப் போலவே அந்த அம்மாவுக்கும் ஒருசெட் நகைகள் கொடுத்திருந்தார். அவைகள்தான் நீ வாங்கிச் சென்றது" சரசு உண்மையை விளக்கினாள்.

நகையை இரவல் கொடுத்துக் கௌரவம் தேடிக் கொண்ட வீட்டுக்கார அம்மாளின் கௌரவமும், இரவல் நகை மூலம்தான் தேடிக் கொண்ட தற்காலிகக் கௌரவமும் கூட அந்த நகைகளைப் போலவே போலியாகிவிட்டதையறிந்த ராதா, கொஞ்சம் அவசர வேலை... அப்புறம் வருகிறேன்" என்று கூறி நாகரீகமாக விடை பெற்றுக்கொண்டு விரைந்தாள்.

**With the best compliments from:**

# Ayyappan Industries

**TIRUPUR.**

# சமுதாயச் சிந்தனைகள் (3)

அன்புள்ள நண்பா!

அரசியலும், பொருளாதாரமும் கலந்த ஒரு கலவையாகச் சமுதாயம் உருவாக்கப்பட்டு விட்டபோதில், சமுதாயத்தின் எந்த இடத்தில் அநீதிகள் பற்றிக்கொண்டிருக்கின்றன என்பதனைக் கண்டறிந்து கூறுவதென்பது அத்துணைச் சுலபமானதாகத் தெரியவில்லை.

பொருளாதார இயல் மேதை பி. ஆர். ஷெனாய் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளே சமுதாயம் அநீதி இழைக்கப்படக் காரணமாக ஆகிவிட்டிருப்பதாக எடுத்துக் காட்டுகிறார்.

அரசியல் வாதி காமராசர், தன்னுடைய அரசியல் கடையின் வாணிபம் சுருங்கிவிடக் காணும்போது, கொள்வார் இல்லாத நிலைமையினை உணர்ந்துகொள்ள வேண்டிய 'சிடுக்கி' நிலை யேற்பட்டுவிட்ட பின்பு, மனிதனை மனிதன் வஞ்சிக்கின்ற அளவுக்கு சமூகம் மாறிவிட்டிருக்கிறது—என்கிறார்.

எப்படியோ, சமுதாயத்தில் அநீதிகள் மலிந்துவிட்டன என்பது மட்டும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

மலிந்துகொண்டே வருகின்ற இந்த அநீதிகள் காரணமாகத்தான் மனிதன் முழுமை பெற்ற ஒரு வாழ்க்கை முறையினை மேற்கொள்ள முடியாத நிலைமை தோன்றியிருக்கிறதா? அல்லது மனிதன், தன் கடமை உணர்வுகளில் அக்கறையற்றவனாக ஆகிவிட்ட பின்பு, அதன் எதிரொலிகளாக இதுபோன்ற அநீதிகள் மலியத் தொடங்கினவா? என்பனபற்றி யெல்லாம் ஆராயும் கடமை நமக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

மனித சாதியின் உயர்வுக்காகவும் கட்டுக்கோப்புக்காகவும் இதுவரையிலே ஆயிரமாயிரம் பேரறிவாளர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்துகூட உழைத்திருக்கிறார்கள். பல்லாயிரம் பேர், இன்றுகூட அறிவார்ந்த அறிவுரைகளை வடித்துத் தந்துகொண்டே இருக்கிறார்கள். என்றாலும் மனிதன் அவைகளைப் பற்றியெல்லாம் சட்டை செய்யவோ, அல்லது சிந்தித்துப் பார்க்கவோ கூட முடியாதவனாக இருக்கிறான்.

மனித வாழ்க்கையில் இன்றைய நிலையில் ஏதோ ஓர் பரபரப்புக் காணப்படுகிறது. அந்தப் பரபரப்பைக் காட்டும் போக்கிலேதான் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டிய சூழ்நிலை நாளும் நாளும் வளர்ந்து கொண்டே வருகிறது. வேக வேகமாக வளர்கிறது. அப்படியொரு பரபரப்பைக் காட்டினால்தான் தன் வெம் பசியின் கொடுமையிலிருந்து ஒரு பகுதியையாவது தவிர்த்துக்கொள்ள முடியும் என்ற மனப்பான்மை வளர்ந்து வந்துவிட்டது.

பொருளாதார இழை சுற்றிக் கொண்டிருப்பதாலே ஏற்பட்ட பரபரப்பு இது. இந்தப் பொருளாதார இழையைச் சுற்றிக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்திவிட்டிருப்பது, அரசியல்—அரசாங்கம்.

எனவே இவை இரண்டினையும் உதறித்தள்ளிவிட்டு மனிதன் சுயேச்சையாக இயங்க முடியவில்லை. இந்த நிலைமைக்கு ஆளாகிவிட்ட மனிதர்களது கூட்டுச் சக்திதான் சமுதாயம் என்ற பேரிலே இயங்கி வருகிறது. இந்த மனிதன் பெறுகின்ற அல்லது சந்திக்கின்ற அநீதிகள் அனைத்துமாக சமூக அநீதிகள் என்ற பெயரிலே அழைக்கப்பட்டுவிடுகின்றன.

சாதிப் பிரிவுகளுக்கு மனித இனம் ஆளாக்கப்பட்டுவிட்ட பின்னர், சாதி, இன, மத அடிப்படைகளை மனித குலத்துக்கு வகுத்துத் தந்துவிட்ட பின்னால் சமுதாயத்தின் மொத்த வடிவமும் உருக்குலைந்து, சிதறி, சின்னபின்னப்பட்டுப்போய்க் கிடக்கிறது.

நண்பா, சாதி, மதம் என்பவைகள் மனித சமுதாயத்தின் மீது திணிக்கப்பட எவையெல்லாம் காரணமாக அமைந்திருந்தனவோ, அவையெல்லாம் தான் இன்றைய நாகரிகப் பகட்டில் கொடிகட்டிப் பறக்கத்தொடங்கி இருக்கின்றன.

சாதிப் பிரிவுகளை யார் எதற்காக எப்போது வகுத்தார்கள் என்று ஆராயும் அரிச்சுவடி நிலையில் நாடு இல்லை. எவ்வளவோ பாடுபட்டுப் பேரறிஞர் அண்ணா அவர்களும், பெரியார் ஈ. வே. ரா வும் அணு அணுவாக ஆராய்ந்து தெளிவாக்கி விட்டிருக்கிறார்கள்.

எனினும் சமுதாயச் சிந்தனைகளைப் பற்றி மேலெழுந்தவாரியான கண்ணோட்டமிட்டால் கூட அந்த எடுத்துக்காட்டப்பட்ட காரணங்களே முன்வந்து நின்று விடுகின்றன.

ஒரு நிலைமை உருவாகிவிட்ட பின்னர், உருவாகிவிட்ட அந்த நிலைமையினை மட்டுமே எண்ணி உருகிச் சோர்ந்துகொண்டிருப்பதனாலே பயன் விளைந்துவிடப் போவதில்லை. விளைவுகளை அனுபவித்துத் தீரவேண்டி ஏற்பட்டுவிட்ட பின்பு, உருவாகிவிட்ட நிலைமைக்கு மாற்று அல்லது பரிகாரம்தேடி ஆராய்வது என்பது தான் விரும்பத்தக்கதாக இருக்கும்.

இளம் பெண் ஒருத்தியின் அழகில், கவர்ச்சியில்

இதயத்தை இழந்துவிட்ட பின்பு, அவளை யெண்ணி, யெண்ணி கசிந்துருகி கண்ணீர் மல்கப்புலம்பிக்கொண்டிருப்பதனாலேயே, அந்த நங்கையின் நளினம் தரும் இன்பங்களையோ, நல்லுடல் நல்கும் சுவையினையோ பெறமுடியாது.

ஒருத்தியின்பால் காதல் கொள்வது என்பது ஒரு வித மயக்கம்கலந்த தத்துவம். எண்ணித்துணிய வேண்டிய கருமம். இடம், காலம், பயன் கருதி அந்த வழியில் இறங்கவேண்டும். கண்ணுங் கண்ணுங் கலந்தது—காதல் பிறந்தது—கவலை எழுந்தது என்ருல் இதற்கு யார்மீது குற்றம் கூறுவது? கண்ணையும் படைத்து, அழகுமிக்கப் பெண்ணையும் படைத்தானே என்று யார்மீது குறை கூறுவது?

தனித்த எவர்மீதும் இதற்கான குற்றத்தைச் சுமத்த முடியாது. காதல் என்பது பொதுவிதி. மனித குலத்துக்கு என்று மட்டுமல்ல—மிருகங்களிடையே, பறவை இனங்களிடையே, புள், பூண்டுகளுக்கிடையே கூட இவை உண்டு என்பதைக் கண்டறிந்துகொண்ட நங்கையும் நம்பியும் ஒருவரை யொருவர் எண்ணி ஏங்கும் தவிப்புக்கு காதல் என்று மகுடம் புனைந்து கொண்டு பேயாய்த்திரியும் போக்குக்கு யாரும் காரண கர்த்தர்களாக விருப்பதில்லை.

அதுபோலவே, சாதி, மத மயக்கங்கள் ஏற்பட்டு விட்ட பின்பு அதன் விளைவுகளுக்கு இவைதான் காரணம் என்று கண்டறிந்து களையத்தக்க முயற்சியில் ஈடுபடுவதுதான் அறிவுடைமையாக இருக்க முடியுமே தவிர, அவனுல்தான் இவன் கெட்டான்; இவனுல்தான் அவள் கெட்டாள் என்று கூறிக் கொண்டிருப்பதனுலேயே விரும்புகின்ற பலன்கள் விளைந்துவிடப் போவதில்லை.

சாதிப்பாகுபாடுகள் உண்டாக இவர் இவர் காரணமாக இருந்தார்கள்—இவை இவை காரணமாக இருந்தன—இன்னின்ன சூழல்கள் ஒத்துழைத்தன என்பது பற்றிக் கண்டறிந்தாகிவிட்டது. களையத்தக்க முயற்சியில் வளர்ந்துவிட்ட பகுத்தறிவினைப் பயன்படுத்தி வழிகாண மட்டுமே முயலவேண்டிய காலம் இது. காரணங்களை மட்டுமே எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கத் தக்க நிலைமை தேவை இல்லை. இன்று நிலை, அப்படியும் இல்லை.

சாதிப் பாகுபாடுகளும், அவை அவற்றிற்கான கட்டு திட்டங்களும் வகுக்கப்பட்ட காலத்து மனிதன் எவனும் இன்றைக்கு இல்லை. அவற்றின் அறுவடைகளைத் துய்த்துத் தொலைக்க வேண்டியவன் மட்டுமே இருந்துகொண்டிருக்கிருன்.

கட்டு திட்டங்கள் பிறந்த காலத்திலே இருந்த மக்கள் தொகைகூட இன்றில்லை. ஆயிரம், பல்லாயிரம் மடங்கு வேறுபாட்டிலே இன்று பல்கி இருக்கிறது மக்கள் இனம்.

சென்னை நகரில் இன்று குடிநீர் தட்டுப்பாடு பற்றிப் பிரமாதமாக எடுத்துக் காட்டப்படுகிறது. திட்டம் தொடங்கிய காலத்தில் சுமார் 5 லட்சம் மக்களுக்காகவே என்றுதான் வகுக்கப்பட்டது. இன்று இருபத்திரண்டு லட்சம் மக்கள் என்று வளர்ந்துவிட்ட பின்னர் தட்டுப்பாடில்லாமல் எப்படி யிருக்க முடியும்? தேவைப்படுவதெல்லாம் ஒரு நீண்ட காலக் கண்ணேட்டத்தின் அடிப்படையில் இருக்கின்ற–இருக்கப்போகின்ற மக்கள் தொகையினையும் கணக்கிட்டுக்கொண்டு அதற்கான முறையில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதனை விட்டு விட்டு, குடிநீர்ப் பஞ்சம், குடிநீர்ப் பஞ்சம் என்று மட்டுமே குரல் கொடுத்துக்கொண்டு வருவதால் பயனேதும் விளையாது என்பது போலவே, சமுதாயக் கட்டு திட்டங்கள் வகுக்கப்பட்ட காலத்திலிருந்த மனிதர்களின் எண்ணிக்கையை விட இன்று வளர்ந்து வந்திருக்கிற மக்கள் தொகை பல்லாயிரக்கணக்கில் வேறுபாடுடையதாகும்.

சமுதாயச் சிந்தனைகள் என்பவை பற்றியோ, சமூக அநீதிகள் என்பவை பற்றியோ எண்ணிப் பார்க்கிற நேரத்தில், இன்றைய மக்கள் தொகையினையும் மறந்துவிடக்கூடாது.

நூறு பேருக்கு என்று ஏற்படுத்தப்பட்ட இரயில் பெட்டியில் இருநூறுபேர் பயணம் செய்யலாம். நெருக்கியடித்து நானூறுபேரும் நின்றுகொண்டு போகலாம். ஆயிரம் இரண்டாயிரம் பேர் என்று போகிறபோது பெட்டிகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும்.

அதுபோலவே சமூகக் கட்டுதிட்டங்கள் எழுந்த காலத்துள்ள நிலைமை இன்றில்லை. மனவளம் இன்றில்லை. அரசியல் அல்லது அரசாங்கக் கொள்கைகள் இன்றில்லை. பொருளாதாரப் போக்கும் தேவையும் இன்றில்லை. எல்லாமே தலைகீழாக மாறிப்போயிருக்கின்றன.

எனவே, அந்த சமூதாயத்தின் மனிதனும் தலைகீழான நிலைமைகளால் வதைபட்டுக்கொண்டிருக்கிருன்.

தின்றுத் தீரவேண்டிய உணவுபற்றியோ, உடுத்துத்தீரவேண்டிய உடைகள்பற்றியோ, படுத்துத் தீரவேண்டிய பகுதிபற்றியோ அவனது கவலைகள் மிகுந்திருக்கின்றன. செயல்கள் பரபரப்படைந்துவிட்டன. இந்த நிலையில் சமூகக் கட்டு திட்டங்கள்பற்றி மனிதன் ஏன் கவலைப்பட வேண்டும்? கவலைப்பட நேரம்தான் ஏது?

சமூகக் கட்டுபாடு என்பது பற்றி எண்ணிப்பார்த்துச் செயல்பட முடியாத நிலைமைகள் வளர்வதற்கு ஷெனுய் கூறுவதுபோல, இன்றைக்கு அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் காரணங்களாய் அமைந்துவிட்டிருக்கலாம், ஆனுல், அவைமட்டுமே மனிதனை வதைத்துக் கொண்டிருக்கின்றனவா? அவற்றினுல் மட்டுமே அநீதிகள் இழைக்கப்படுகின்றனவா என்பது பற்றியும் ஆராய்ந்து தீரவேண்டும்.

காமராசர் எடுத்துக்காட்டுவதுபோல, மனிதனை மனிதன் வஞ்சிக்கவேண்டிய நிலைமைகள் யாவை? எதனுல் அந்நிலைமை? இவற்றிற்கெல்லாம் யார் பொறுப்பு? வினுவோடு மட்டுமே நிறுத்திவிடமுடியாது. விடையும் கண்டாக வேண்டும்.

விடைகாண முயலும்போதுதான் நண்பா எத்த இடத்திலே தொடுவது என்பது புரியாமல் போகிறது. அல்லது வியப்பு ஏற்பட்டுவிடுகிறது.

அகவாழ்வைத் தொட்டு, அங்கிருந்து தொடரலாம் என்ருல் மதவாதிகளின் கனல் கண்களைப் பற்றிய எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. புற வாழ்வைத் தொடலாம் என்ருல் அரசியல் கொள்கைகள் அச்சுறுத்துகின்றன.

சேற்றினைச் சந்தன மணமாக்கிவிட முடியாது என்பார்கள். சந்தனம் சேருகிக் கிடக்கிறதே என்ன செய்வது?

# அன்புக் காலையின்



# அமைதிப் பூங்கதிர்!

காலக் கடலில் கதிர்த்த நித்திலம்
ஞாலப் புதுமை நயநா கரிகம்
கோலக் குறளின் குறுகாப் பேருரை
சோலைப் பாட்டு சுவைக்கும் பொதுமை
வானம் சிரித்து வடித்த புகழ்யாழ்
மானக் கற்பு மலர்தொல் காப்பியம்
காதற் சிந்து கனவுக் காதை
பேசும் அமைதி பேசாப் பேருரை
சமைவர லாற்றுச் சிமையப் பூந்தேன்
இமையின் விழிப்பு இளமைப் புரட்சி
சிரிக்கும் மழலை மரபின் மலர்ச்சி
பரிவுக் கோட்டை பாசத் தென்றல்
எழுச்சிப் பாயிரம் ஏமத் தாய்மை
பழுத்த உவமை படைப்பின் வெற்றி
எழுத்துக் கோவில் ஈர்க்கும் ஆற்றல்

கண்ணியப் பூந்தேன் கடமைப் பொன்வான்
நுண்ணிய 'தமிழம்' பெண்மைப் பெருமிதம்
கற்பனை விளைத்த கற்புப் பேரியாழ்
கொற்கைச் சிரிப்பு குடிமை வாழை
ஊக்கப் பண்ணை உணர்ச்சிப் பூங்கா
ஆக்கத் தாமரை ஆர்வத் தேன்மழை
தென்னகப் பீடு தேனிசை யருவி
மின்னக நாடகம் மேதை வாழ்வு
அன்புக் காலையின் அமைதிப் பூங்கதிர்
அந்தி வானத் தழகுப் பூநிலா
முந்திப் பிறந்த முத்தமிழ்த் தென்றல்
இந்திப் பேயை எதிர்த்த ஆண்மை
அண்ணா வின்புகழ் வாழிபல் லூழி
என்றூர்த் துலகம் வியக்க
நின்றூர்த் தியற்கை நெடிதுவந் ததுவே!

—புலவர். தி. நா. அறிவுஒளி—

> கோழைத்தனத்துக்கும் அசட்டுத் துணி
> விற்கு மிடையிலிருப்பது வீரம்; பணிவுக்கும்
> கர்வத்திற்கு மிடையிலிருப்பது அடக்கம்;
> கமுக்கத்துக்கும் சலசலப்புக்கு மிடையிலிருப்
> பது சத்தியம்.

என்று. அரிஸ்டாடில் எந்தச் சூழ்நிலையில் எடுத்துரைத்தானோ தெரியவில்லை. கோழைத்தனம் காரணமாக ஒன்றிலிருந்து ஒதுங்கி இருப்பதென்பது அறிவுடைமையாகாது. பணிவு என்பதன் பேரால் அடங்கி கிடப்பதும் அப்படித்தான்.

மனிதனது அகவாழ்வைத் தொடுவதால் மதவாதிகளது ஆத்திரத்தைக் கிளறிவிட வேண்டி நேரிடுமோ என்றோ, புறவாழ்வைத் தொடுவதால் அரசியல் கொள்கைகளின்மீது மோதவேண்டி வருமே என்பதுபற்றியோ இனியும் எண்ணி ஒதுங்கிக் கொண்டால், சாக்ரடீஸ்— இந்த சமுதாயத்தைப் பார்த்து மீண்டும் சிரிப்பான்! எள்ளி நகையாடுவான்! யாரும் அறியாவண்ணம் தன்னுள் எண்ணி அழுவான்!

> எண்ணியவற்றை எடுத்துக் காட்ட முடி
> யாதவன் கோழை; எடுத்துக் காட்டும்போது
> சுற்றுச் சார்புபற்றி அஞ்சுபவன் பேதை—

என்றல்லவா சாக்ரடீஸ் சொல்லிவைத்து விட்டிருக்கிறான்!

மின்மினிப்பூச்சி பறிக்கும்போதுதான் பளபளக்கிறது; சோம்பிக் கிடக்காமல் இயங்கும்போதுதான் மனிதன் பிரகாசிக்கிறான் என்று பெய்லி வேறு சொல்லி விட்டிருக்கிறான்.

சாக்ரடீசாக விருந்தாலும், பெய்லியானாலும், வால்டேர் ஆனாலும், லெனினாலும் சுற்றுச் சார்பு பற்றி எண்ணிக்கொண்டு மட்டுமே ஒதுங்கி இருந்திருந்தால் தம் சமுதாயச் சிந்தனைகளை உலகுக்கு வழங்கி இருக்க முடியுமா?

வழிகாட்டிக் கொண்டிருப்பன ஏராளம். மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுவன அனந்தம். பெரியார் அவர்களது சமுதாயச் சிந்தனைகளோ, திரு. வி. க. அவர்களது சிந்தனைகளோகூட உரிய அக்கறைக்கு ஆளாகவில்லை என்கிறபோது, நம் போன்றோரது சிந்தனைகள் மட்டுமா பயன் தந்துவிடப் போகின்றன? என்றாலும் நண்பா, பயன் விளைகிறதோ இல்லையோ— எடுத்துக் காட்டிவிட வேண்டியதுதான் கடமை! அந்தக் கடமைக்கு உன் ஒத்துழைப்பு மிகவும் தேவை. நீயும் சரி, உன்னைச் சார்ந்தவர்களும் சரி, சமூகம் பற்றி இந்த சமூக அமைப்பு எப்படி இருக்கிறது என்பது பற்றி, எப்படி எப்படி இருக்கலாம் என்பதுபற்றி எனக்குத் தெரிவிக்க வேண்டும். என் சிந்தனைக்கு அவை பயன்படக்கூடும். அதனால் ஒருவேளை பெரும் பயனும் விளையலாம். அடுத்தக்கிழமை இதுபற்றி மேலும் ஆராய்வோம்.

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

1. இலவசக் கல்வியினால் 'தரம்' கெடும் என்பது உங்கள் கருத்தா?

மேல் மட்டத்தில் 'இலவசக் கல்வி'யினால் தரம் கெட்டுப் போகாது என்று நீங்கள் கூறும் காரணங்கள் என்னவோ!

2. ஒரு மொழியிடத்து பற்று இருக்கலாம்; வெறி கூடாது என்கிறார்களே, எது சரி?

மொழி தொடர்பான விஷயத்தில் இப்படி பற்று, வெறி என்று பிரிப்பதே தவறு என்கிறேன் நான். பல சந்தர்ப்பங்களில் பற்றோடிருக்கும் ஒருவனுக்கு சில சந்தர்ப்பங்களில் வெறியோடிருக்க வேண்டிய நிலைமைகளும் ஏற்படத்தான் செய்கின்றன! என்ன செய்வது!

3. ஒருவரது சிந்தனையைப் போன்று, இன்னொருவராலும் ஒரே நேரத்தில் சிந்திக்க முடியுமா?

முடியும் என்ற முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறார்கள் ரஷ்ய-அமெரிக்க விஞ்ஞானிகள்! அவர்களது ஆராய்ச்சி முடிவுகள் தானே இப்போது நமக்கு வேத வாக்கு.

4. தமிழ்நாடு — கேரளா ஆகிய மாநிலத்துக்கிடையே பஸ்போக்குவரத்து தொடர்பான ஒப்பந்தம் சீராகச் செயல்படுகிறதா?

கேரளா செயல்படுகிறது; தமிழகம் பஸ் செல்லும் வழித் தடங்கல் (ள்)கள் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது.

5. மலைப்புரம் எதிர்ப்பு மதிக்கப்படுமா?

எதையாவது, யாரையாவது மதித்துப் பழக்கப்பட்டவர்களா கம்யூனிஸ்டுகள்?

6. சீனப் போக்கு, ரஷ்யாவை வெற்றி கண்டுவிடும்போல் தெரிகிறதே, நடக்குமா?

எல்லைத் தகராறுகளை மட்டும் வைத்து இப்படி முடிவுக்கு வரக் கூடாது. சீனாவைச் சுற்றிலும் அதன் எதிரிகள் வலுவோடுதான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

7. உலகப் பாட்டாளிகளை ஒன்றுபடக்கோரும் கம்யூனிஸ்டுகள், தங்களுக்குள் கோஷ்டிப்பூசல்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்களே—ஏன்?

அப்படியெல்லாம் இருந்தால் தான் அரசியல் ஆற்றொழுக்காக நடந்துகொண்டிருக்கும்.

8. தெலுங்கானா பிரிக்கப்பட்டால் அது ஒருமைப்பாட்டை பாதிக்குமா?

பிரிவினை என்பது துண்டித்துக் கொண்டுபோய் விடுவது. தெலுங்கானா விஷயம் அப்படி அல்ல. இதனால் ஒருமைப்பாடு குலையும் என்பது சுயநல நோக்கம் கொண்ட கருத்தாகும். ஆனால் தெலுங்கானா பிரிவினை அவசியம் என்பது நம் கருத்து அல்ல.

# ?! வினா-விடை

9. 'மான் மானம்' என்று எதனைக் குறிப்பிடுகிறார்கள்?

மயிர் நீப்பின் உயிர் நீக்கும் தன்மை எத்தனைத் தன்மானமுடையது என்று நினைக்கிறீர்கள்! அவை மான்களாக விருப்பதால் உயிர் விடுகின்றன. தயவுசெய்து மனிதர்கள்மேல் பொருத்திப் பார்க்காதீர்கள்.

10. அயூப்கானுக்கு எதிர்காலம் உண்டா?

குருஷேவின் எதிர்காலம் என்ன ஆயிற்று என்பது தெரிந்த பின்புமா இப்படி ஒரு வினா!

11. அரசியல் கொள்கைகள் செல்வாக்கிழந்து போவதற்குச் சிறப்பான காரணங்கள் ஏதேனும் உண்டா?

மக்களுக்காகத்தான் அரசியல் என்று அதன் கொள்கைகள் வகுக்கப்படாமல், தங்களுக்கு ஒரு தலைமை வேண்டும்; அதை ஏற்றிப் போற்ற ஒரு கூட்டம் வேண்டும் என்பதற்காக கொள்கைகள் வகுக்கப்பட்டால், அது 'காங்கிரசாக'த்தானே போகும்!

12. இந்த வாரத்தில் மட்டும் தமிழகத்தில் பஸ் விபத்துக்கள் ஏராளம் இல்லையா?

ஆமாம்! இந்த வாரத்தில் மனித உயிர்களுக்கு விடுதலை வழங்க வந்த "வீரர்"கள் அதிகம் பேர்தான்! இது போன்றவர்கள் நாள்தோறும் நாள்தோறும் பெருக வேண்டும்!

13. கோயில் சொத்துக்களை கல்விக்குப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

கொடுப்பார் இருந்தால், கொள்வாருக்குக் குறைவா என்ன!

14. கலிங்கப் போரில் அசோகனை எதிர்த்து நின்ற மகத மன்னன் பெயர் என்ன?

பத்துப் பதினைந்து ஆண்டுகளாக இந்த வினாவை தமிழகமெங்கும் பரவவிட்டு வருகிறேன். இப்போது என்னையே தாக்கி இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களிடம் விடை காண முயன்று ஏமாந்திருக்கிறேன். பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்களிடம் கூட நேரில் கேட்டிருக்கிறேன். இன்னும் வரலாற்று ஏடுகளில் துருவித் துருவிப் பார்த்திருக்கிறேன். பதில் மட்டும் கிடைக்கவில்லை. துருவத் துருவ அசோகன்மீதே ஒரு ஐயம் ஏற்பட்டு விடுகிறது.

15. மத்திய அரசு, புதிதாக இரண்டு கோடி ரூபாய் நிவாரண நிதி அளித்திருக்கும் முறை எப்படி இருக்கிறது?

கொட்டினால்தான் தேள்; இல்லையென்றால் பிள்ளைப் பூச்சி என்ற பழமொழிபோல் இருக்கிறதா?

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ.இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
36. கிநக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.